பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 மார்கழி 18 வெள்ளிக்கிழமை (02-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:37

ஒஸ்லோ தீர்மானப்படி சமஷ்டி அடிப்படையில்

# இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்த வசதியாக இடைக்கால அரசமைப்பு!

## முஸ்லிம் காங்கிரஸ் முன்மொழிவதாக ஹக்கீம் அறிவிப்பு

கொழும்பு,ஜனவரி2

**ஒஸ்லோவில் நடந்த பேச்சுக்களின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையில் ஒரு தீர்வைக்கண்டு அதை இயலச்செய்வதற்கும் -**

**வடக்கு - கிழக்கிலும் மற்றும் தேவைப்படும் ஏனைய பிரதேசங்களிலும் இடைக்கால நிர்வாகங்கள் தொடர்பான ஏற்பாடுகளை இயலச்செய்வதற்கும் - இடைக்கால அரசமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படுவது அவசியமாகும்.**

**இத்தகைய முன்மொழிவு ஒன்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன் வைக்கின்றது என அதன் தேசியத் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அறிவித்திருக்கிறார்.**

நேற்றுக் கொழும்பில் தமது அமைச்சில் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலும், பின்னர் செய்தி ஊடகங்கள் சிலவற்றுக்கு வழங்கிய செய்தியிலும் இவ்விவகாரம் குறித்து அவர் கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் கூறியதாவது:-

வடக்கு, கிழக்கிலே முஸ்லிம்களுக்கென்று தனிநிர்வாக அலகு அமையவேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம்.

அதேசமயம், வடக்கு - கிழக்கிலும் ஏனைய தேவைப்படும் பிரதேசங்களிலும் உருவாக்கப்படக்கூடிய இடைக்கால நிர்வாக ஏற்பாடுகளை இயலச்செய்வதற்காக முழு நாட்டுக்குமான ஓர் இடைக்கால அரசமைப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டிய அவசியத்தையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

நாம் முன்வைக்கவுள்ள யோசனைகளில் இவற்றைப் பற்றியெல்லாம் சற்று விரிவாக நாங்கள் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கின்றது. முஸ்லிம் சமூகத்தின் புத்திஜீவிகளோடும் வடக்குக் கிழக்கைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற - முஸ்லிம் காங்கிரஸ் அல்லாத பிறகட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களோடும் நாம் கலந்துரையாட வேண்டியுள்ளது. எனவே, எமது இந்த விதப்புரைகள் பகிரங்கப்படுத்தப்படுவது சற்றுத் தாமதமாகிறது.

*கேள்வி:* இப்போது இருக்கும் அரசமைப்பு எந்தவகையில் தடையாக இருக்கிறது? -

*பதில்:* இலங்கையின் தற்போதைய

(14ஆம் பக்கம் பார்க்க)

உதயன் வருட வழிகாட்டி உள்ளே........

## பரீட்சை ஆணையாளர் - இளங்குமரன் கிளிநொச்சியில் நேற்றுச் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

வடக்குக்கு இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ ஏமகிந்த விஜயசிறி தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரனை நேற்றுச் சந்தித்து இரு மணிநேரம் கலந்துரையாடினார்.

ஏ-9 பாதை ஊடாக வந்த அவர் கிளிநொச்சியில் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரனையும், வன்னி மாவட்ட கல்விப்பணிப்பாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஆணையாளருடன், பிரதி பரீட்சை ஆணையாளர் போல் அன்ரனி, முன்னாள் பிரதிப் பரீட்சை ஆணையாளர் குலதுங்க ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

பரீட்சைத் திணைக்களம் மீது பெரிய அளவில் குற்றச்சாட்டுக்கள் இல்லை என்று தெரிவித்த இளங்குமரன் திணைக்களத்துக்கு தமிழ்மொழி மூலமான அதிகாரிகள் கூடுதலாக நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் தனித்தரப்புக் கோரிக்கையை எதிர்ப்போரின் பருப்பு எம்மிடம் வேகாது!

### அமைச்சர் ஹக்கீம் ஆக்ரோஷம்

கொழும்பு,ஜன.2

"முஸ்லிம்களின் நேர்மையான அரசியல் போராட்டங்களை அங்கீகரிக்கத் தவறுபவர்களின் கூற்றுக்களை நாம் செவிமடுக்க வேண்டிய அவசியம் இல்லை. உடன்படிக்கை செல்லுபடியாகாது; முஸ்லிம்களை தனித்தரப்பாக அங்கீகரிக்க முடியாது என்று கூறுபவர்களின் பருப்பு எம்மிடம் வேகாது"

- இப்படி ஆக்ரோஷமாகக் கூறினார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்.

நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

"விடுதலைப் புலிகள் இருபது வருடங்களுக்கு மேல் ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்தியே இடைக்கால நிர்வாகம் ஒன்றைப்பெற முயற்சிக்கின்றனர். ஆனால், எவ்விதமான போராட்டங்களிலும் கலந்துகொள்ளாத முஸ்

(02ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி இனிமேல் தனித்தே போட்டியிடும் என்கிறார் சங்கரி

விரைவில் வரும் என எதிர்பார்க்கப்படுகின்ற பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு புலிகளுடன் இணைந்து போட்டியிடுமானால் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு - கிழக்கில் தனித்துத் தேர்தலில் நிற்கும்.

கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி எம்.பி. சிங்களத் தினசரியான 'திவயின'வுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயர் வடக்கு - கிழக்கு பெரும்பான்மை மக்களின் உள்ளத்திலிருக்கும்வரை வேறு கட்சிகளின் சின்னத்தின் கீழோ அல்லது சுயேச்சைக் குழுவிலோ போட்டியிடும் தேவை தமக்கு ஏற்படாதெனவும் அவர் அப்பத்திரிகையில் அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

நான்கு கட்சிகளை இணைத்து கடந்த பொதுத் தேர்தலின் போது உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு இப்போது முழுமையாக புலிகளின் கைகளில் இருக்கின்றது என்று அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

## புலமைப் பரீட்சை பெறுபேறு மாத இறுதியில்!

யாழ்ப்பாணம்,ஜன.2

கடந்த மாதம் நடைபெற்ற 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை இம்மாத இறுதியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பரீட்சை ஆணையாளர் டபிள்யூ.ஏ.மகிந்த விஜயசிறி தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடுசெய்யும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன என்றும் -

தற்சமயம், அவற்றை கணனிமயப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன என்றும் - ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## சூழ்ச்சி மூலம் ஜனாதிபதி ஆட்சியை நீடிக்கவிடோம்

### அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் சூளுரை

கொழும்பு,ஜன.2

"சூழ்ச்சி மூலம் தனது ஆட்சிக் காலத்தை நீடிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சித்தால் அதற்கு இடமளிக்கமாட்டோம்."

அமைச்சரவை முடிவுகளை வெளியிடுவதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

1999 ஜனாதிபதித் தேர்தல் மூலம் 2005 வரை ஆறு ஆண்டுகள் ஜனாதிபதியாகப் பணியாற்றவே மக்கள், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுமதி அளித்துள்ளனர். அதற்கு அமையவே அவர் பகிரங்கமாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார். ஆட்சிக் கவிழ்ப்போ, பதவியிழப்போ இடம்பெறாத நிலையில் மீண்டும் - இடையில் சத்திய பிரமாணம் செய்யவேண்டிய தேவை ஏதும் அவருக்கு எழவில்லை.

ஜனநாயக நாடு ஒன்றில் ஜனாதிபதி ஒருவர் - மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் - இரகசியமாகப் பதவிப் பிரமாணம் செய்வது என்றோ, செய்தார் என்றோ கூறுவது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

அப்படி இரகசியமாகச் செய்திருந்தாலும்கூட, அதை அமைச்சரவைக்குத்தன்னும் கூறவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

எனவே, அப்படி ஒரு சத்தியப் பிரமாணம் நடந்ததாகக் கூறப்படுவது உண்மையா அல்லது பொய்யா என்ற

(02ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாவியில் ஹெலி நோட்டம்!

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மல்லாவிப் பிரதேசத்தின் மீது கடந்த செவ்வாய் பகல் இலங்கைப் படைகளின் இரண்டு ஹெலிகொப்டர்கள் தாழ்வாகப் பறந்து நோட்டமிட்டன என விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த நடவடிக்கை யுத்தநிறுத்த மீறல் எனக் குறிப்பிட்டு அது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடமும் அவர்கள் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளால் அனுமதிக்கப்பட்ட (14ஆம் பக்கம் பார்க்க)




சில விநாடிகளில் நீங்களும் ஸ்பீட் லோனை பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு அருகிலுள்ள NSB கிளைக்கு விரையுங்கள்.

ஸ்பீட் லோன் | NSB



நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த இலங்கை பரீட்சை ஆணையாளர் டபிள்யு.ஏ.மகிந்த விஜயசிறி, வேம்படி மகளிர் கல்லூரியில் கல்விப் புலம்சார் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் போது எடுக்கப்பட்ட படம். யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸுடன் பரீட்சை ஆணையாளர் கலந்துரையாடுவதை முதலாவது படத்திலும், இச்சந்திப்பில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலம் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர். (படம்: வசந்தன்)

# அமைதிச் சூழலைப் பேணிப் பாதுகாத்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவோம்!

## யாழ். படைகளின் தளபதியின் புதுவருடச் செய்தி

யாழ்ப்பாணம்,ஜன.2

தற்போது உருவாகியுள்ள சமாதான சூழ்நிலையைப் பாதுகாத்து சீர்குலையவிடாமல் பேணி நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவோம்.

யாழ். படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால விடுத்திருக்கும் புத்தாண்டுச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

2003ஆம் ஆண்டு கழிந்து பிறந்துள்ள 2004ஆம் ஆண்டு உங்கள் அனைவருக்கும் சமாதானமும், செளபாக்கியமும் நிறைந்த புத்தாண்டாக அமையவேண்டுமெனப் பிரார்த்தனை செய்வதோடு கடந்த இரு தசாப்தங்களாக இருளடைந்து காணப்பட்ட நமது நாட்டில் வெளிச்சத்தை காண்பதற்கும் நிரந்தர சமாதானத்தை உருவாக்கிக் கொள்வதற்கும் நாம் அனைவரும் ஒற்றுமையாக கைகோர்த்து பொறுப்புடன் செயல்படுவோம் என இந்த புத்தாண்டில் தெரிவிப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பம் குறித்து நான் மனமார்ந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

சந்தர்ப்பவாதிகளால் வேண்டியோ, வேண்டாமலோ உருவாக்கப்பட்ட இந்தக் கொடிய யுத்தம் இன்று நாம் அனைவரையும் இன்னல்களை அனுபவிக்கச் செய்துள்ளது. முடிவு காணப்படாத இந்த யுத்தத்தில் சிக்கி ஆயிரக்கணக்கான உயிர்களை பலிகொடுத்தும், பெறுமதி மிக்க சொத்துகளை நாசப்படுத்தியதாலும் நாம் கண்ட வெற்றி என்ன? இவ்வாறான யுத்தத்தின் அர்த்தம் என்ன?

இப்போது பல வருடங்களாக மூடப்பட்டிருந்த ஏ-9 வீதி சமாதானப் பாதையாக திறக்கப்பட்டது. இந்த வீதி திறக்கப்பட்டதனால் நீங்களும் உங்கள் பிள்ளைகளும் அதிக நன்மையடைந்துள்ளீர்கள். அச்சம், பயம் இன்றி யாழ்ப்பாணத்தில் இருந்து நாட்டின் ஏனையப் பகுதிக்கு தரை மார்க்கமாக பயணம் செய்யக் கூடிய வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

நீண்டகாலமாக முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதியில் சிக்குண்டிருந்த மக்கள் சுதந்திரமாக நடமாடவும், அவர்கள் தேவையான பகுதிக்கு சுதந்திரமாகப்போய் வருவதற்கும் வசதிகளும், வாய்ப்புகளும் கிடைத்துள்ளன. இது குறிப்பிட்டுக் கூறக்கூடிய விசேட அம்சமாகும். கடந்த காலங்களில் இந்த வீதி மூடப்பட்டிருந்தமையினால் அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசியும் கூடுதலாகவே இருந்தது. ஆனால் தற்போது இந்தப்பொருள்களின் விலையும் குறைவடைந்துள்ளது. மேலும் பல்வேறு அச்சுறுத்தல் காரணமாக இடம்பெயர்ந்து நாட்டின் வெவ்வேறு பகுதியில் வசித்த மக்கள் மீண்டும் தமது நிரந்தர வசிப்பிடத்தில் மீளக்குடியமர வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

எது எப்படியானாலும் கடந்த காலங்களில் நாம் கசப்புணர்வுடன் செயல்பட்டு பெற்ற வெற்றிகள் ஏதும் கிடையாது. நமது நாடு சுதந்திரமடைந்து 55 வருடங்கள் முடிவடைந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் மூன்றாவது உலக நாடுகளுக்கிடையே நமது நாடு வறிய ஏழை நாடாக இருப்பதற்கு இந்த யுத்தமே காரணமாகும். எனவே உருவாகியுள்ள சமாதான சூழ்



நிலையைப் பாதுகாத்து சீர்குலையவிடாமல் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த நாம் அனைவரும் கைகோர்த்து செயல்பட வேண்டும்.

- இவ்வாறு தளபதி தெரிவித்திருக்கிறார். (ஐ)

# சண்டிலிப்பாய்-அளவெட்டி வீதியில் முகமூடிக் கும்பல் அட்டகாசம்!

யாழ்ப்பாணம்,ஜன.2

சண்டிலிப்பாய் - அளவெட்டி வீதியில் மோட்டார் சைக்கிள்களில் வலம் வரும் முகமூடிக் கும்பல் ஒன்று பொது மக்களை அச்சுறுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

தொட்டிலடிச் சந்திக்கும் அளவெட்டிக்கும் இடையேயான வீதியில் இந்தக் கும்பல் தினமும் இரவுவேளைகளில் மோட்டார் சைக்கிள்களில் வலம் வருகின்றது. இந்தக் கும்பல் வீதியில் நடமாடுவோரை கூக்குரலிட்டும், தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தும், பொது மக்களை அச்சுறுத்தி வருகின்றது. இந்தக் கும்பலில் உள்ளவர்கள் தமது முகங்களை துணிகளால் மூடிக்கட்டியுள்ளனர்.

நேற்றுமுன்தினமிரவு 9 மணியளவில் சங்கானை மருத்துவமனை ஊழியர் ஒருவரை இந்தக் கும்பல் வழிமறித்து மிரட்டியது. அவர் அவலக் குரல் எழுப்பியதால் பொதுமக்கள் அந்த இடத்தில் திரண்டனர். இதனையடுத்து மேற்படி கும்பல் அங்கிருந்து அகன்றது.

(ஏ-ரி)

# முஸ்லிம்களின் தனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிம்கள் எப்படி சமபங்கு கேட்க முடியும்? தனித்தரப்பாக எப்படிப் போக முடியும்? என்று புலிகள் தரப்பில் கூறப்படுகின்றது. மேலும் நீங்கள் செய்து கொண்ட ஒப்பந்தமும் செல்லுபடியாகாது என்றும் அவர்கள் கூறுகின்றனர். இது குறித்து உங்களுடைய பதில் என்ன?" - என்று ஒரு செய்தியாளர் அமைச்சரிடம் கேட்டார்.

முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைக்குத் தள்ளப்படக் கூடாது என்பதே எங்கள் நிலைப்பாடு -

அதனால், ஜனநாயகக் கோட்பாடுகளின்படி நேர்மையான அரசியல் போராட்டம் நடத்தி வருகின்றோம். அரச மட்டத்திலும் சர்வதேச அரங்கிலும் எங்களுடைய போராட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

புலிகள் இயக்கமும் அரசும் முஸ்லிம்களின் தனித்தரப்புப் பிரதிநிதித்துவத்தை ஏற்கனவே அங்கீகரித்துள்ளன. இப்போது அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்ளாத எந்தப் பேச்சும் வெற்றியளிக்காது. இவர்களுடைய பருப்பு எம்மிடம் வேகாது - என்று அமைச்சர் பதில் அளித்தார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் அமைச்சருடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலியும் மற்றும் அரசியல்பீட உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

## சுவர்க்கவாயில் ஏகாதசி உற்சவம்

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ் வண்ணார்பண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் சுவர்க்க வாயில் ஏகாதசி உற்சவம் நாளை சனிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

இவ்விழாவில் 'திருமால் பெருமை" என்னும் பொருள் பற்றி சிவநெறிச் செம்மல் பிரம்மஸ்ரீ காரை கு.சிவராஜ சர்மா சொற்பொழிவாற்றுவார். (எ-ரி)

★ ★ ★

வடமராட்சி.ஜன.2

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் நாளை சனிக்கிழமை வைகுண்ட ஏகாதசி உற்சவம் நடைபெறும்.

இந்த உற்சவத்தின்போது ஏட்டில உள்ள ஏகாதசி புராணம் அன்றைய தினம் பௌராணிகர்களால் படிக்கப்படும். (எ-173)

## சூழ்ச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகம் எழுந்துள்ளது. வெறுமனே அப்படி ஒரு சத்தியப்பிரமாணம் இடம்பெற்றது என்று இப்போது வந்து கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தனது சூழ்ச்சி மூலம் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு ஜனாதிபதி எடுத்த நாடகம் - முயற்சி - தோல்வியில் முடிவடைந்துவிட்டது. அவர் எதிர்பார்த்தபடி ஆளும் தரப்பிலிருந்து எம்பிக்களை கவர்ந்திழுக்க அவரால் முடியவில்லை.

அந்தத் தோல்வியைச் சமாளிப்பதற்காகப் புதிய புரளியை அவர் இப்போது கிளப்பிவிடுகின்றார்.

இவ்வாறு ஜனாதிபதியின் பதவிக் காலநீடிப்புக் குறித்து பல செய்திகள் அடிபட்டபோது அதை ஜனாதிபதி செயலகமோ ஜனாதிபதியோ மறுக்கவுமில்லை: அங்கீகரிக்கவுமில்லை.

ஜனாதிபதியின் பதவிக்காலம் உரிய ஏற்பாடுகளின்படி 2005 டிசெம்பருடன் முடிந்துவிடும். தன்னிச்சையாக ஜனாதிபதி அதனை நீடிக்க முடியாது. அப்படி நீடிக்கமுயன்றால் மக்கள் சக்தியைத் திரட்டி எமது எதிர்ப்பைக காட்டி, அந்த முயற்சியை முறியடிப்போம். ஆட்சியில் அளவுக்கு அதிகமாக ஒருநாள் தன்னும் அவர் நீடிக்க அனுமதிக்கமாட்டோம் - என்றார் அமைச்சர் பீரிஸ்.

# தமிழ் மொழிமூல ஆசிரியர் நியமனம் விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

திருகோணமலை,ஜன.2

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளுக்கான ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்ப திகதி ஜனவரி 23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, போட்டிப்பரீட்சை வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் நடைபெறும்.

முன்னர் இந்தப் போட்டிப் பரீட்சையை கொழும்பில் மட்டும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.மகாசிவம் நேற்று கல்வி, மனிதவள அபிவிருத்தி அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் ஏ.திஸாநாயக்காவுடன் நடத்திய கலந்துரையாடலை அடுத்து மேற்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதேவேளை - சங்கீதம், நடனம், சித்திரம், உடற்கல்வி, மனைப்பொருளியல், விவசாயம், கடல்வளத் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களைப் போதிக்கவும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

முன்னர் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக்கல்வி ஆகிய நான்கு பாடங்களுக்கு மாத்திரமே ஆசிரியர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள கோரப்பட்டிருந்தன.

தற்போது எஞ்சிய பாடங்களுக்கும் ஆசிரியர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்களைக் கோர முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

வடக்கு - கிழக்கில் எஞ்சியுள்ள ஏனைய கல்விப்பிரச்சினைகள் குறித்து இன்னும் ஒருவாரத்தில் தமிழ் ஆசிரியர் சங்கம் அமைச்சின் செயலாளர் பி.கே.நாணயக்காரவுடன் பேச்சு நடத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பதாரிகளின் வயதெல்லையை அதிகரிப்பது, வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ளவர்களுக்கே இந்நியமனங்களை வழங்கும் விதத்தில் அதனை மட்டுப்படுத்துவது என குறித்தும் அடுத்த வார சந்திப்பில் பேச்சு நடத்தப்படுமெனவும் சங்கச் செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார். (எ)

# பதிவாளர் நாயகம் அலுவலகம் செயலகத்தில் இன்று திறப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.2

வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். பதிவாளர் பணிமனைக் கட்டடத்தில் அரச அதிபர் செ.பத்மநாதனால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்படவிருக்கின்றது.

வடக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள என்.சதாசிவஐயர் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் அரச அதிகாரிகள் கலந்துகொள்வர்.

இந்த அலுவலகம் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கான பதிவுப் பணிகளை மேற்கொள்ளும். இந்தப் பதிவுப் பணிகள் இதுவரை காலமும் திருகோணமலையில் இயங்கிய உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம் ஊடாக மேற்கொள்ளப்பட்டுவந்தன.

அதேவேளை, கிழக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகமாகவும் என்.சதாசிவஐயர் பதிவாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். (எ-3)

## திருவாசக முற்றோதல்

வடமராட்சி,ஜன.2

புலோலி உபயகதிர்காம தான் தோன்றி ஸ்ரீ சக்கர சண்முகராலயத்தில் நாளை 3ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணிவரை திருவாசக முற்றோதல் இடம்பெறும். (எ-173)

# பரீட்சை ஆணையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரகசியம் பேணக்கூடிய அதிகாரிகளைச் சிபார்சு செய்தால் அவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணையாளர் அப்போது பதில் அளித்தார்.

தொடர்ந்து கல்வி அமைச்சு மீது பல குற்றச்சாட்டுகளை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினார் இளங்குமரன்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆணையாளர் நாயகம் வியப்புத் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, யாழ்ப்பாணம் வருகைதந்த ஆணையாளர் வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வியாளர்களைச் சந்தித்தார்.

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு செய்யும் பணிகளை பார்வையிட்ட ஆணையாளர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

★ வடக்கு - கிழக்கு மாகாணத்தில உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தமிழ் மொழிமூலம் ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களுக்கான போட்டிப் பரீட்சைகள் கொழும்பில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இப்பரீட்சையை யாழ். மாவட்டம் உட்பட வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் நடத்த எமக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

★ ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீட்டுப்பணிகள் தற்போது யாழ் மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

இப்பணி தொடர்ந்தும் இங்கு இடம்பெறும். அது மட்டுமல்லாது ஜி.சீ.ஈ உயர்தர விஞ்ஞான பாடபரீட்சை விடைத்தாள்களையும் இங்கு வைத்து மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பிரதி பிரதம பரீட்சை ஆணையாளர் நாயகம் போல் அன்ரனி, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், பேராசிரியர்களான பொன்பாலசுந்தரம்பிள்ளை, அ.சண்முகதாஸ், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் உட்பட மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

(எ-3-5)

# கடுங்குளிர் தாங்க முடியாமல் ஈரானியக் குழந்தைகள் சாவு!

## ஆறு நாள்களின்பின் இளைஞர் உயிருடன் மீட்பு

பாம்,ஜன.2

பேரழிவை ஏற்படுத்திய பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட ஈரானின் பாம் நகர மக்கள், வீதிகளிலேயே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். கடந்த ஐந்து நாள்களாக அங்கு கடுங்குளிர் நிலவுகிறது. பூகம்பத்தில் உயிர் பிழைத்த குழந்தைகள் குளிர்தாங்கமுடியாமல் இறக்கின்றன என்று பாம் நகர மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். வெளிநாடுகளின் உதவியுடன் அங்கு நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றபோதிலும், அவை இன்னமும் முழுமையாக மக்களைச் சென்றடையவில்லை.

அதேநேரம், இடிபாடுகளில் சிக்கி உயிருடன் இருந்த இளைஞர் ஒருவர் நேற்று மீட்கப்பட்டார் என்று மீட்புப் பணிகளைக் கவனித்துவரும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பூகம்பம் ஏற்பட்டு ஆறு நாள்களின்பின்னர் இவர் மீட்கப்பட்டிருப்பது குறித்து மீட்புப் பணியாளர்கள் அதிர்ச்சி தெரிவித்தனர்.

இடிபாடுகளில் சிக்கியவர்கள் இனியும் பிழைத்திருக்க முடியாது என்பதால் மீட்புப்பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. நிவாரணப் பணிகள் துரித கதியில் நடந்துவருகின்றன.

தற்காலிக மருத்துவமனைகள் அமைக்கப்பட்டு காயமடைந்தவர்களுக்கு தொடர் சிகிச்சை நடந்துவருகிறது. ஏராளமான சடலங்கள் இன்னும் புதைக்கப்படாமல் இருப்பதால் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளது. இதனால், பாம் நகர மக்களுக்கு தடுப்பூசிகள் போடப்படுகின்றன. சுகாதாரமற்ற தண்ணீர் கிடைப்பதால் வெளிநாட்டு மீட்புக் குழுவினர் கொண்டுவந்த தண்ணீர்ப் போத்தல்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைப்பதற்கான பொருள்கள் எவையும் இல்லாதமையினால் அவர்கள் டின்களில் அடைக்கப்பட்ட உணவையும், ரொட்டியையும் மட்டுமே சாப்பிட்டு வருகின்றனர்.

பூகம்பத்தில் பிழைத்த குழந்தைகள் கூட குளிர் தாங்கமுடியாமல் இறந்துவிட்டன என்று சில பெண்கள் தெரிவித்துள்ளனர். எனவே, தங்குவதற்கு பாதுகாப்பான கூடாரங்களையும், போர்வைகளையும் வழங்கும்படி இவர்கள் கோரி வருகின்றனர்.

இந்நிலையில், பாம் நகரத்தில் பாதுகாப்பான இடத்தில் உறுதியான வீடுகளை கட்டுவதற்காக ஈரான் அரசு நாலாயிரம் கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.



ஈரானில் அண்மையில் நிகழ்ந்த பூகம்பத்திற்கு தனது உறவுகளனைத்தையும் இழந்துவிட்டுத் தவிக்கும் ஈரானியப் பெண்ணொருவர் உடைந்து நொறுங்கிப்போன தனது வீட்டின் முன்பாக சோகமே உருவாக அமர்ந்திருக்கிறார்.

## இளவரசியின் காதலுக்கு பச்சைக்கொடி

ஸ்டொக்ஹோம்,ஜன.2

சுவீடன் பட்டத்து இளவரசி விக்ரோரியாவின் (வயது -26) காதலுக்கு அங்கு நடைபெற்ற கருத்துக் கணிப்பில் பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது.

இளவரசி விக்ரோரியாவும் அவரது 'ஜிம்' பயிற்சி ஆசிரியர் டானியலும் நீண்ட காலமாக காதலித்து வந்தனர்.

சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த டானியலை இளவரசி திருமணம் செய்யலாமா? என்று அங்கு சர்ச்சை எழுந்துள்ளது.

இதனால் நாட்டு மக்கள் இளவரசியின் காதல் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதையறிய கருத்துக் கணிப்பு நடந்தது.

கருத்துக்கணிப்பில் பங்குபற்றிய பெரும்பாலானவர்கள் இளவரசியின் காதலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். நாட்டு மக்கள் தனது காதலுக்கு பச்சைக்கொடி காட்டியதையடுத்து விரைவில் அவர் டானியலை திருமணம் முடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டானியல் இது குறித்து கூறுகையில்-

'எமது காதல் உண்மையானது' எனவே, அது வெற்றியளிக்கும்; விரைவில் திருமணமும் நடக்கும் - என்றார்.

## புத்தாண்டைக் கொண்டாடிய ஈராக் ஹோட்டலில் நள்ளிரவில் கார்க்குண்டு வெடிப்பு! ஐவர் பலி!!

புத்தாண்டைக் கொண்டாடிய ஈராக்கிய ஹோட்டலில் நள்ளிரவில் கார்க் குண்டு வெடித்தது. இதில் ஆகக் குறைந்தது ஐவர் கொல்லப்பட்டனர்; 27 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் இருவர் பிரிட்டிஷ் பிரஜைகளாவர். இதனை பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சும் உறுதி செய்தது.

தலைநகர் பக்தாத்திலுள்ள வெளிநாட்டவர்கள் தங்கும் பிரபல ஹோட்டல் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் நடந்தது.

இசை மற்றும் நடன நிகழ்வுடன் நள்ளிரவில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் திளைத்திருந்தனர்.


அப்போது, எவரும் எதிர்பாராத வகையில் ஹோட்டலின் முன்புறச் சுவருடன் வேகமாக வந்தகார் மோதியது, காரில் பொருத்தப்பட்ட குண்டுகள் வெடித்துச்சிதறின.

இதில் அந்த ஹோட்டலின் பெரும்பாலான பகுதி இடிந்து பலத்த சேதமடைந்தது. ஹோட்டல் முழுவதும் தீப்பற்றி எரிந்தது. தீ அங்கிருந்த ஏனைய கட்டடங்களுக்கும் மளமளவெனப் பரவியது.

குண்டு வெடித்தபோது அங்கு அமெரிக்கப் படைவீரர்களும் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு பாதுகாப்பாக ஹோட்டலின் வெளியில் அமெரிக்கப்படை வீரர்கள் சிலர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்றும் கூறப்படுகிறது. கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருந்த படையினரில் சிலர் காயமடைந்தனர் என்றும் பக்தாத் நகருக்குப் பொறுப்பான அமெரிக்கப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து அப்பகுதிக்கு மேலதிக அமெரிக்கப் படையினர் விரைந்தனர். உடனடியாக அந்த ஹோட்டலை அவர்கள் சீல் வைத்து, கட்டட இடிபாடுகளை அகற்றி காயமடைந்தோரை மீட்டனர்.

அதேநேரம்- ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படையினர் நேற்று திக்ரித் நகரில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். கொண்டாட்ட நிகழ்வு நடந்த பகுதியில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது.



குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான ஈராக்கிய ஹோட்டலில் கார் ஒன்று சிதைந்துபோய்க்கிடக்கிறது.




சீன எழுத்துக்களால் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியபடி ஆயிரக்கணக்கான ஹொங்கொங் வாசிகள் வருடப்பிறப்புத் தினமான நேற்று பெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினர். தங்களது பகுதியில் முழுமையான ஜனநாயகம் பேணப்படவேண்டும் என அவர்கள் கோஷங்களை எழுப்பினர். பிரிட்டிஷாரிடமிருந்து ஹொங்கொங் சீனாவின் நிர்வாகத்திற்கு கீழ் வந்தபின்னர் தமது சுதந்திரங்கள் கட்டுப்படுத்தப்படுவதாக அங்குள்ளவர்கள் கருதுகின்றனர்.

## முஷாரப்பின் பதவிக்காலம் நீடிப்பு

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் 2007ஆம் ஆண்டுவரை பதவியிலிருக்க அந்நாட்டு நாடாளுமன்றம் நேற்று அங்கீகாரம் அளித்தது. சர்ச்சைக்குரிய கருத்துக்கணிப்பின் மூலம் முஷாரப் ஜனாதிபதி ஆனார் என்று அந்நாட்டு எதிர்க்கட்சிகள் முறையிட்டிருந்தன. இதனையடுத்து முஷாரப்பினால் நியமிக்கப்பட்ட பாகிஸ்தான் தலைமை நீதிபதியிடம் இந்த விவகாரம் விடப்பட்டது.

நடந்து முடிந்த கருத்துக்கணிப்பின்படி முஷாரப் ஜனாதிபதியாகலாம் என்று அவர் தீர்ப்பளித்தார். அத்துடன், முஷாரப்பிற்கு பதவிப்பிரமாணமும் செய்துவைத்தார். இது அங்கு பலத்த சர்ச்சையை எழுப்பியிருந்தது.

இந்நிலையில் தொடர்ந்து பதவி வகிப்பதற்கு நாடாளுமன்றில் அனுமதி கோர முஷாரப் முடிவுசெய்தார். நேற்று இதுகுறித்து நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் முஷாரப் தொடர்ந்து பதவிவகிக்க ஆதரவு தெரிவித்தனர்.

இதையடுத்து, 2007ஆம் ஆண்டு வரை பதவி வகிப்பதற்கு முஷாரப்பிற்கு நாடாளுமன்றம் அனுமதி வழங்கியது.

### வெளிநாட்டவர்களின் கைரேகையைப் பதிவுசெய்வதா?

## அமெரிக்க நடைமுறைக்கு பிரேசில் பலத்த பதிலடி!

பிரசிலியா,ஜன.2

அமெரிக்கா செல்லும் வெளிநாட்டவர்களைப் புகைப்படம் எடுத்து அவர்கள் கைரேகையைப் பதிவு செய்யும் முறைக்கு பிரேசில் கண்டனம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் இந்த நடைமுறைக்கு பதிலடி வழங்கும் விதமாக பிரேசிலுக்கு வரும் அமெரிக்கர்களின் கைரேகையைப் பதிவுசெய்யவேண்டும் என்று அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில், 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி நியூயோர்க் நகரில் தாக்குதல் நடந்ததைத் தொடர்ந்து அந்த நாட்டுக்குச் செல்லும் வெளிநாட்டினர் மீதான கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டன.

அமெரிக்கா செல்வதற்கு விஸா வழங்குவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. விஸா கிடைத்து அந்நாட்டுக்குச் சென்றாலும், விமான நிலையங்களில் குடியேற்ற சோதனை நடக்கும்போது வெளிநாட்டவர்களைப் புகைப்படம் எடுத்து, அவர்கள் கைரேகைகளைப் பதிவுசெய்யவும் அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த நடைமுறை குடியேற்ற சட்ட விதிகளை மீறியவர்களை அடையாளம் காணவும், குற்ற நடவடிக்கைப் பேர்வழிகளின் பட்டியலைத் தயாரிக்கவும் உதவுகிறது என்று அமெரிக்கா கூறுகின்ற போதும், இந்த நடைமுறை 27 நாடுகளுக்குப் பொருந்தாது என்றும் -

அந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்கா செல்ல புகைப்படம் எடுத்து கைரேகை பதிவுசெய்யவேண்டிய அவசியமில்லை என்றும் - அமெரிக்க அரசு கூறியுள்ளது.

அமெரிக்காவின் இந்த நடைமுறைக்கு பல நாடுகள் கண்டனம் தெரிவித்திருந்தன. தற்போது, பிரேசிலும் இது குறித்து கண்டனம் தெரிவித்திருக்கிறது.

பிரேசில் நாட்டு மக்களும் அமெரிக்கா செல்லும்போது இந்த நடைமுறைக்குள்ளாக வேண்டியுள்ளது. இது அந்த நாட்டு மக்களிடம் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. பிரேசில் இது தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜூலியர் செபாஸ்ட்டியோ -டா-சில்வா, அமெரிக்காவுக்கு கண்டனம் தெரிவித்தார். "அமெரிக்காவின் இந்த நடைமுறை மனித உரிமைகளுக்கு அச்சுறுத்தலாக உள்ளது- கண்ணியக் குறைவானது - மிருகத்தனமானது- நாஸிகள் செய்த கொடுமையை விட இது கொடூரமானது"- என்று நீதிபதி கண்டித்தார்.

எனவே, பிரேசில் நாட்டுக்குள் நுழையும் அமெரிக்கர்களை பதிவு செய்யும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

புத்தாண்டு முதல் இந்த உத்தரவு நடைமுறைக்கு வருவதாகவும் அவர் கூறினார்.

## மூன்றாம் ஆண்டு நினைவுகள்



திருமதி
**சந்திரபூமலர் அருளானந்தம்**

| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 30.05.1948 | 02.01.2001 |

*மூன்று ஆண்டுகள் சென்றிடினும்*
*மறவாத பூமுகம்*
*தாய் இன்றி வாடுகின்றதோ*
*உங்கள் அகம்*
*சேய் எமைப் பிரிந்து*
*சென்றீரோ விண்ணகம்.*

\- குடும்பத்தினர்.

உடுவில். (26614) (26-11-19-25)

## ஒரு தொகுதி அ.அட்டைகள் வந்து சேர்ந்தன

நவாலி,ஜன.2

தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு யாழ். மாவட்ட பாடசாலைகள மூலம் விண்ணப்பித்த மாணவரின் ஒரு தொகுதி அடையாள அட்டைகள யாழ். செயலக ஆள்பதிவுத் திணைக்களததிற்கு வந்து சேர்ந்துள்ளன. (ஒ-100)

**விற்பனையாளர்கள் தேவை**

புடைவை வியாபாரத்தில்
அனுபவமுள்ளவர்களும்,
பழகவிரும்புவர்களும் தேவை.

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
44,42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (26618) (26)

## அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்,

**பகிரங்க ஏலவிற்பனை - 2003**

இதன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்றச் சான்றுப்பொருள்கள் 09.01.2004 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணியளவில் இந்நீதிமன்ற வளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன. அத்தருணம் ஏலத்தில் வாங்குபவர்கள் பணத்தைச் செலுத்தி பொருள்களை உடனே நீதமன்ற வளவில் இருந்து அப்புறப்படுத்தவேண்டும். ஏலத்தில் விற்கபபடும் பொருள்களை ஏலவிற்பனை தொடங்குவதற்கு அரைமணிநேரம முன்னதாக மன்றின் முன்னனுமதியுடன் பார்வையிடலாம்.

**ஏலத்தில் விடப்படும் பொருள்கள்.**

1. துவிச்சக்கர வண்டிகள்.
2. மோட்டார் சைக்கிள்கள்.
3. டெக்.

ம.செல்வரத்தினம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

(C/32339)(34-11-19)

## நெஞ்சுவிட்டகலாத நினைவஞ்சலி

| 30 ஆம் ஆண்டு | | முதலாம் ஆண்டு |
|---|---|---|
|  |  |  |
| **அமரர் கிருஷ்ணர் முத்தையா** | | **திருமதி சீதாங்கனி முத்தையா** |
| தெல்லிப்பழை | | தெல்லிப்பழை |
| 23.01.1899 ← | தோற்றம் | → 14.03.1914 |
| 06.02.1973 ← | மறைவு | → 14.01.2003 |

ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது எம் துயர்
அகலாது உங்கள் நினைவு.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.
சேச்சடி, தெல்லிப்பழை.

மு.பாலகிருஷ்ணன். சகோதரர்கள்.
101/10. லேடி மக்கலம்ஸ் ட்ரைவ். கண்டி. (26315) (25-11-19)

## Diploma in Hardware Engineering

உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% செய்முறைப் பயிற்சி நெறி. ரஷ்ய தொழில்நுட்பம் எமது மண்ணில் எவரும் கற்கலாம். கணனி பற்றிய முன்னறிவு தேவையில்லை. தமிழிலே விரிவுரைகள்.

முதலாவது பிரிவு வெற்றிகரமாக முடிவுற்றது. புதிய பிரிவுகள் 08.01.2004 இல் ஆரம்பம். பதிவுகள் 01.01.2004 முதல்

※ ஒரு பிரிவில் 18 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.
※ ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு புதிய கணனி வழங்கப்படும்.
※ பயிற்சி முடிவில் அக் கணனியை Assembling செய்து Software instalation செய்யவேண்டும்.

- Assembling
- Fault finding
- Software Installation
- Upgrading
- Repairing
- Configuring Servicing
- Networking
- Trouble Shooting

மேலதிகமாக

1. ஒரு CD யில் உள்ள Programகளை வேறொரு CD இற்கு Copy செய்தல்
2. கணனியில் வேறு Program களை Install செய்தல்.
3. Computer Assembling, Computer இன் தொழிற்பாடு போன்ற CD களை நீங்களே Copy செய்து பெற்றுக்கொள்ளலாம்.

புதிய Giga byte 52X CDROM, புதிய Casing Tower Model புதிய RAM, புதிய Mouse, புதிய Keyboard முற்றிலும் புதிதாக மறுசீரமைக்கப்பட்ட PII 400Mhz6.2GB கணனிகள் நம்பமுடியாத மலிவுவிலையில் விற்பனையாகின்றன.

Lectures By: **Mr.R.Rohan** Computer Hardware Engineer, St. Peterburg State Electrotechnical, University of Russia.

O/L மாணவர்களுக்கான கணனிப்பயிற்சி சர்வதேச தரத்தில்
ஆரம்பம்: 05.01.2004 ரூபா 1000

**NORTH LANKA INSTITUTE OF INFORMATION TECHNOLOGY**
(26617) பிரதான வீதி, (M.P.C.S.) அருகில், சங்கானை. (25-11-19)

## அனைவருக்கும் எமது மனங்கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்கள்

மக்கள் மனதில் தமக்கென நீங்காத இடம் பிடித்த

# வீடியோ கலாமினி



சிங்கப்பூரில் இருந்து வரவழைக்கப்பட்ட நவீன புத்தம்புதிய "டிஜிட்டல்" கமராக்கள் - கணனி தொழில் நுட்பங்களுடன் வீடியோ படம் பிடித்திடவும்.
பூப்புப்புனித நீராட்டு விழாவிற்கென விசேடமாக அமைக்கப்பட்ட
அழகுக்கு அழகூட்டும்



※ சுழல் தாமரை
※ சுழல் நட்சத்திரம்
※ அன்ன ஊஞ்சல்
※ சுழல் இராட்டினம்
※ மாடிப் படிச் செற்
※ பலவர்ணக்குடைகள்
※ தண்ணீர்த் தொட்டி
※ நீர்த்தடாகம்
※ மின்சாரப்புகை.

போன்ற பிரமாண்டமான அமைப்புக்களுடன் செற் அமைத்து படப்பிடிப்பிற்கு அழகு மிளிரச் செய்கின்றோம்.

※ அழகிய எழில் கொஞ்சும் இயற்கைக் காட்சிகள் உள்ளடக்கிய சொக்கட்டான் மணப்பந்தல் சேவை
※ காட்சிக்கு ஏற்றமுறையில் பலவர்ண ஆடைகளையும் மாற்றிப் படம்பிடிப்பதற்கான கலைக்கூடம்
※ நவீன பூங்கா வசதிகள் -ஊஞ்சல்கள் என்பன போன்ற பல்வேறு வசதிகளையும் செய்துள்ளோம் என்பதை மன மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்கள் திருப்தியே எங்கள் சேவை!

**சித்திரைப் புத்தாண்டில்**



**இராஜ மாணிக்கம்**

**கல்யாண மண்டபம்**



**வீடியோ கலாமினி** அச்சுவேலி.



அச்சுவேலி.
T.P 060-221 2431-0777 111018

குறிப்பு: அச்சுவேலியில் புதிதாக வீடியோ படப்பிடிப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் சிலர் எமது உறவினர் எனக்கூறி மோசடி செய்கின்றனர். அவர்களுக்கும் எமது நிறுவனத்துக்கும் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை. போலி நபர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்! எமது நிறுவனத்திற்கு யாழ். மாவட்டத்தில் முகவர்களோ பிரதிநிதிகளோ எவரும் நியமிக்கபடவில்லை என்பதை அறியத் தருகின்றோம். எம்முடன் நேரில் தொடர்புகொள்ளுங்கள்!

(c-32337)(32-11-19-25)

## உதயன்

# கல்விநிலையைச் சீர்படுத்த ஒன்றிணைவோம்!

நமது தமிழர் தாயகத்தின் கல்வி நிலைமை தொடர்பாக வெளியாகும் புள்ளி விவரங்கள் திடுக்கிட வைப்பனவாக உள்ளன.

கடந்த இரண்டு தசாப்த கால போர் நெருக்கடிகளினால் வடக்கு - கிழக்கில் 94 ஆயிரம் சிறுவர்கள் பாடசாலை செல்லாமல் இருக்கின்றார்கள். இவர்களில் பதினைந்து வீதமான சிறார்கள் பாடசாலை இடைவிலகல் மாணவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். மேலும், இச்சிறுவர்களில் 35 சதவீதமானோர் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறுவர் பாதுகாப்பு நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த மனவேதனை தரும் புள்ளி விவரங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

சிறுவர் பாதுகாப்பு நிதியம், 'யுனிசெவ்' மற்றும் பொது அமைப்புகள் பிரதேச ரீதியாகத் திரட்டிய - சிறுவர்களின் கல்வி மற்றும் ஆரோக்கிய நிலைமை தொடர்பான - மேலும் சில புள்ளிவிவரங்கள் வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 9 ஆயிரத்து 662 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை மற்றும் படுவான்கரை ஆகிய பிரதேசங்களில் மட்டும் எண்பது சதவீதமான மாணவர்களுக்குப் பற்சூத்தை காணப்படுகின்றது. அறுபது சதவீதமான மாணவர்கள் இரத்தசோகையினாலும், ஐம்பது வீதமானோர் குடல் நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐம்பது சதவீதமானோரில் போஷாக்கின்மைக் குறைபாடு காணப்படுகின்றது. அவர்கள் அழுக்கான ஆடைகளையே அணிகின்றனர். மேலும், 40 வீதமான மாணவர்களுக்கு ஊட்டச்சத்து கிடைப்பதில்லை. இருபது சதவீதமானவர்கள் காலை உணவின்றியே பாடசாலைக்கு வரவேண்டிய நிலையில் உள்ளனர். இவற்றால் பாடசாலை இடைவிலகல் வீதம் அதிகரித்துள்ளது.

ஒரு சில இடங்களில் பெறப்பட்ட இந்தப் புள்ளி விவரத் தகவல்கள் ஏனைய இடங்களின் நிலைமை குறித்தும் உய்த்துணர உதவும் மாதிரிகளாகும்.

இத்தகைய அதிர்ச்சி தரும் புள்ளிவிவரங்கள் குறித்து கல்வி ஆர்வலர்கள் அதிக சிரத்தையும் கவனிப்பும் கொண்டிருக்கிறார்கள் என்பது ஆறுதலை ஏற்படுத்துகின்ற தகவல்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போர் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வியின் அவசியம் மற்றும் போஷாக்கு, சுகாதாரம் தொடர்பான விழிப்பூட்டும் செயல் திட்டங்களை புலிகளின் மருத்துவப் பிரிவு பல்வேறு பொது அமைப்புகளுடன் இணைந்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

'யுனிசெவ்' நிறுவனமும் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பத் தூண்டும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மற்றும் பேரணிகளைப் புத்தாண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

பிறந்த புத்தாண்டில் சிறார்களை தரம் I வகுப்பில் சேர்க்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஐந்து வயதுச் சிறுவர்களை பாடசாலையில் சேர்ப்பதை ஊக்கப்படுத்தவும், பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் உள்ளீர்ப்புச் செய்வதைத் தூண்டும் வகையிலும் ஏற்பாடு செய்யப்படும் இப்பேரணிகளில் முழுக் கல்விச் சமூகமுமே இணைந்துகொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கல்வியின் மகத்துவத்தை விளக்கும் வகையில் வீதி நாடகங்கள், தெருக்கூத்துகள் போன்ற நிகழ்வுகளும் இந்தப் பேரணிகளில் இடம்பெறவுள்ளன.

கல்வி மேம்பாட்டுப் பேரவை, கல்விக் கழகம் போன்றவையும் இதே விடயங்களில் அதிக ஆர்வமும் சிரத்தையும் காட்டி வருகின்றன.

பாடசாலைகளைவிட்டு இடையில் விலகிய மாணவர்களைப் பாடசாலைகளில் உள்ளீர்ப்புச் செய்யும் முயற்சியில் அவை அதிக அக்கறை காட்டுகின்றன.

ஈழத்தமிழரின் அழியாச் சொத்து கல்வி ஒன்றே. அதைத் தக்கவைத்துக்கொள்வதில் - அழியாச் சொத்தாகப் பேணுவதில் - நாம் கூடிய கவனம் காட்ட வேண்டியவர்களாக உள்ளோம். யுத்த காலத்தில் இத்துறையில் ஏற்பட்ட பின்னடைவுகளைச் சரிக்கட்டி சீர்செய்வதில் தீவிரம் காட்டவேண்டிய காலகட்டம் இது.

இது விடயத்தில் கல்வி ஆர்வலர்கள் காட்டும் பொறுப்புணர்வுக்கு உரிய ஒத்துழைப்பு வழங்குவது கல்விச் சமூகத்தினதும், கல்வித்துறை நிர்வாகத்தினதும், சமூகத்தினதும் கடமையாகும்.

அனைவருக்கும் கல்வி என்ற உயரிய விழுமியத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் நமது சமூகத்தை மேம்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.

# வலுவிழந்தோர் தமது ஆற்றல்களால் சுயமாக வாழ்வை அமைக்கவேண்டும்!

## சமூக உளவள ஆலோசகர் அறிவுறுத்து

வலி.தெற்கு,ஜன.2

வலுவிழந்தவர்கள் சிறப்பான ஆற்றல்களைக் கொண்டிருப்பார்கள். அவற்றைப் பயன்படுத்தி தமது வாழ்க்கையை அவர்கள் சுயமாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

சமூக உளவள ஆலோசகர் டாக்டர் வி.அனவரதன் இவ்வாறு அறிவுறுத்தினார். வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச வலுவிழந்தோர் தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில் கலந்துகொண்டு, 'வலுவிழப்பு வாழ்வின் முன்னேறத்துக்குத் தடையல்ல' என்ற தலைப்பில் டாக்டர் வி.அனவரதன் உரையாற்றினார்.

அவர் தமது உரையில் கூறியதாவது:-

ஊனமுற்றவர், வலுவிழந்தவர் என்ற சொற்பதங்கள் சம்பந்தப்பட்டவர்களிற்கு உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் அவர்களை "வித்தியாசமுடைய ஆற்றலுடையோர்" என அழைப்பதே சிறந்தது. குறைபாடு உடையவரை ஒரு பொம்மைபோல இருத்திவைத்து அவருடைய அனைத்துத் தேவைகளையும் நாம் செய்துகொடுப்பது அவர்களிற்கு உளவியல்ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும். இந்தநிலை மாறவேண்டும்.

வலு என்பது எமது மனதைப் பொறுத்தது. தான் முன்னேறவேண்டும் தமது முயற்சியில் வெற்றிபெறவேண்டும் எனக்கருதிச் செயற்பட்டால் எந்த ஊனமும் ஒருவருக்கும் தடையாக இருக்காது.

அமெரிக்காவில் கால்கள், காதுகள் செயலிழந்து கைகளும் மூளையும் மட்டுமே செயற்படும் ஒருவர் அதி நவீனமான விமானம் மற்றும் அதிவேக ரயில் ஆகியவற்றின் தொழில்நுட்பங்களைப் பௌதிகவியல் விளக்கங்களை வழங்கி வருகிறார். அவரது மன உறுதி அவரது ஊனங்களை வென்றுவிட்டது. கால் ஊனமுற்ற ஒருவர் தமது மனவலிமையால் எவரெஸ்ட் சிகரத்தை ஏறி முடித்துள்ளார்.

ஊனமுற்ற பலர் தமது முயற்சியால் பின்னல் வேலை செய்தல், ஓவியம்வரைதல், கடதாசிப் பைகள் செய்தல் போன்ற பல தொழில்களைச் செய்துவருகின்றனர்.

எனவே, வலுவிழந்தவர்கள் அதனைத் தமது முன்னேற்றத்திற்குத் தடையாகக் கருதக்கூடாது. பிறரில் தங்கியோ சமூகத்தில் இருந்து ஒதுங்கியோ வாழாமல் மன உறுதியுடன் செயற்படவேண்டும். தமது ஆற்றல்களைப் பயன்படுத்தி சுயமாக வாழப்பழகிக் கொள்ளவேண்டும். - இப்படி அவர் அறிவுறுத்தினார்.

பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தமது தலைமையுரையில், வலுவிழப்பை ஏற்படுத்திக் கொடுத்த இறைவன் அவர்களில் பலரை பலதுறைகளில் மிளிரவைத்துள்ளான். உடலால் ஊனமுற்றவர்கள் உள்ளத்தால் வலுவுடையோராகவும் திகழ்கின்றார்கள். இவர்கள் அனைவரையும் அரவணைத்துச் செயற்படும் தன்மை எமது சமூகத்திற்கு ஏற்படவேண்டும் - என்றார்.

பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 30 ஊனமுற்றவர்கள் இந்நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டனர்.

# அம்புலன்ஸ் படகின் தரிப்பிடம்: முடிவெடுக்க விரைவில் கூட்டம்

தீவகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள அம்புலன்ஸ் படகின் தரிப்பிடம் குறித்து ஆராயும் கூட்டம் ஒன்று விரைவில் நடத்தப்படவுள்ளது.

யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதம் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தீவகப் பிரதேசத்திற்கான நோயாளர் அம்புலன்ஸ் படகுச் சேவையை எப்போது ஆரம்பிப்பது என்று இதுவரை முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அத்துடன், இந்த அம்புலன்ஸ் படகு சேவையில் ஈடுபடாதபோது அதனை எங்கு நிறுத்திவைப்பது என்பது குறித்தும் தீர்மானிக்கப்படவில்லை. இவை பற்றி இறுதி முடிவுகள் எடுப்பதற்காக யாழ். அரச அதிபர், தீவகப் பிரதேசத்தைச் சேர்ந்த உதவி அதிபர்கள், கடற்படையின் உயரதிகாரிகள் மற்றும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக (UNHCR) அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்கும் முக்கிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று விரைவில் நடத்தப்படவுள்ளது.

தற்போது இந்த அம்புலன்ஸ் படகு ஊர்காவற்றுறை துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது - என்றார் அவர்.

இந்த அன்புலன்ஸ் படகைத் தமது பகுதியில் நிறுத்திவைக்கும்படி நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகிய பகுதி மக்கள் கோரிவருகின்றனர். இந்தக் கோரிக்கையை தத்தமது பகுதிப் பொது அமைப்புக்கள் ஊடாக பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முன்வைத்துள்ளனர்.

இதனால், அன்புலன்ஸ் படகு குறித்து இறுதி முடிவு எடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதனாலேயே இது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள ஆலோசனைக்கூட்டம் கூட்டப்படுகிறது.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நிதி உதவியைக் கொண்டு இப்புதிய அன்புலன்ஸ் படகு நிர்மாணிக்கப்பட்டது. இப்படகில் பணியாற்ற மருத்துவப் பயிற்சிபெற்ற ஊழியர்களை நியமிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுவருவதாக யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஒ-135)

# தென்னிலங்கை மரப்பலகைகள் அடுத்தமாதம் எடுத்துவரப்படும்

## மரக்கூட்டுத்தாபனம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.2

தென்னிலங்கையில் இருந்து அடுத்த மாதம் மரக்கூட்டுத்தாபனம் மூலம் மரப்பலகைகள் குடாநாட்டுக்கு எடுத்து வரப்படவுள்ளன. இதனால் மரப்பலகைகளுக்கு நிலவுகின்ற பற்றாக்குறை நீங்கிவிடும்.

அரச மரக்கூட்டுத்தாபனத்தின் வட பிரதேச முகாமையாளர் க.விஜயரட்ணம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

முன்னர் தென்னிலங்கையில் இருந்து குடாநாட்டுக்கு மரங்கள் மற்றும் அரியப்பட்ட மரப்பலகைகள் ஆகியவை எடுத்து வரப்பட்டன. இதன்மூலம் குடாநாட்டின் மரத்தேவை ஓரளவு பூர்த்திசெய்யப்பட்டது. ஆனால், கடந்த ஆண்டு மரங்கள் எடுத்து வரப்படவில்லை. தென்னிலங்கையில் அரிந்த மரங்கள் போதியளவு கிடைக்காதது, மரங்களை எடுத்து வருவதில் ஏற்பட்ட இடையூறுகள் ஆகிய காரணங்களால் கடந்த வருடம் கூட்டுத்தாபனம் மரங்களை எடுத்துவரவில்லை.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் தென்னிலங்கையிலிருந்து மரங்களை எடுத்துவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுவரெலியா, பண்டாரவளை, குருநாகல் போன்ற இடங்களில் இருந்து அரிந்த மரங்கள் எடுத்துவரப்படவுள்ளன. ஆகவே, பொதுமக்களின் மரத்தேவை பெரும்பாலும் பூர்த்தி செய்யப்படும் - என்று வட பிரதேச முகாமையாளர் தெரிவித்தார். (ஒ-10-6)

### நாளை

மார்கழி 19
சனிக்கிழமை
(03.01.2004)
திதி : ஏகாதசி
பி.ப. 1.52 வரை
நட்சத்திரம்: பரணி
காலை 6.41 வரை
கார்த்திகை விரதம்
சுவர்க்க வாசல் ஏகாதசி
சுபநேரம்: 3.30-5.00
ராகுகாலம்: 9.30-11.00
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உதடுகளை மூடிக் கொண்டு இதயத்தைத் திறந்து வையுங்கள்.

# போலி டொலர் நோட்டுகள் குறித்து மக்களை எச்சரிக்கிறது இராணுவம்

போலி அமெரிக்க டொலர் நோட்டுகள் குறித்து விழிப்பாக இருக்குமாறு பொதுமக்களை இராணுவத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக பலாலியில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்தில் சிலர் போலி டொலர்களை கைம்மாற்றி வருகின்றார்கள். இவர்கள் போலி டொலர்களைக் கொடுத்து இலங்கையில் பாவனையில் உள்ள பணத்தை மாற்றிக்கொள்கின்றனர். அத்துடன், இந்த நபர்களால் அண்மையில் யாழ்ப்பாணத்தில் கைம்மாற்றப்பட்ட கள்ள டொலர் நோட்டு ஒன்று பாதுகாப்புப் படையினரிடம் கிடைத்துள்ளது. கள்ள டொலர்களைப் போன்று, இலங்கையில் பாவனையிலுள்ள பணநோட்டுகளைப் போன்ற கள்ள நோட்டுகளையும் அச்சடித்து யாழ். குடாநாட்டில் மக்களிடம் கைம்மாற்றியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இதனால், பொதுமக்கள் இவ்வாறான வஞ்சகர்களின் ஏமாற்றுச் செயல்களில் அகப்படாமல் அன்றாடம் உழைத்துச் சம்பாதிக்கும் பணத்தைக் கவனமாகக் கையாளும்படியும், கள்ள நோட்டுக்கள் தொடர்பாக அவதானமாக இருக்கும் படியும் யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் கேட்டுள்ளது.

- என்று அதில் உள்ளது. (ஒ)

## கூரைமரம் வழங்கத் தாமதம்;

# தற்காலிக இருப்பிடம் அமைக்க இடம்பெயர்ந்தோர் அல்லல்

வலி.வடக்கு,ஜன.2

தற்காலிக இருப்பிடங்கள் அமைக்க சிமெந்துத் தூண்கள் மற்றும் தகரங்கள் வழங்கப்பட்டு நீண்டகாலமாகியும் இதுவரை கூரை மரங்கள் வழங்கப்படவில்லை என்றும் -

இதனால் இருப்பிடம் அமைக்க முடியாது இடம்பெயர்வர்கள் அல்லற்படுகின்றனர் என்றும் -

கூறப்படுகிறது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 118 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு தற்காலிக இருப்பிடங்களை அமைக்கும் திட்டம் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தால் மேற்கொள்ளப்பட்டது. ஓர் இருப்பிடத்துக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் நிதி ஒதுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கையாக, சிமெந்துத் தூண்களைத் தயாரித்து வழங்கும் பொறுப்பு சனசமூக நிலையம் ஒன்றிடம் வழங்கப்பட்டது. இதன்படி, சிமெந்துத் தூண்கள் தயாரித்து வழங்கப்பட்டு சில மாதங்கள் கடந்துவிட்டன. அத்துடன், இருப்பிடம் அமைப்பதற்கான தகரங்களும் வழங்கப்பட்டுவிட்டன.

இதனையடுத்து, சிமெந்துத் தூண்களை நடுவது உட்பட முதற்கட்டப் பணிகளை இடம்பெயர்ந்த மக்கள் மேற்கொண்டனர். ஆனால், கூரைப் பகுதிக்கான கூரை மரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. இதனால், தற்காலிக இருப்பிடக் கட்டுமானப் பணியைப் பூர்த்திசெய்ய முடியாது இடம்பெயர்ந்த மக்கள் அல்லற்படுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தற்காலிக இருப்பிடங்களை அமைக்கத் தேவையான கூரை மரங்களை வழங்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கோருகின்றனர். (ஒ-86)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 ~ 03 ~ 1965

உதிர்வு 28 ~ 12 ~ 1998



**திருமதி வசந்தகுமாரி நிர்மதிராசா B.A.**

(ஆசிரியை, யா/ஆழியவளை சீ.சீ.த.க.வி.)

திதி: தசமி 02-01-2004

ஆண்டுகள் ஐந்து ஆனதம்மா
ஆறவில்லை எம் துயரம்
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது எம் துயரம்!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:

நிரந்தர முகவரி: உடுத்துறை வடக்கு, தாளையடி.

தற்போதைய முகவரி: காட்டுப்புலம், தொண்டமானாறு.

அன்புக் கணவர், பிள்ளைகள், உறவினர்.

(26660)(35-11-21)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 16 ✿ 11 ✿ 1950

உதிர்வு 13 ✿ 01 ✿ 2003



**அமரர் மார்க்கண்டு ஆனந்தராசா**

திதி:02-01-2004

எங்கள் வாழ்வின் ஒளி விளக்கே!
எமது வாழ்வு சிறக்கப் பாடுபட்ட
எங்கள் அன்புத் தெய்வமே!
மரணம் உங்களை மறைத்து விட்டாலும்
எங்கள் இதயத்தில் என்றும்
உங்கள் நினைவு நிலைத்திருக்கும்!

தோப்பு, அச்சுவேலி.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(26626)(34-21-11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 1925 ~ 06 ~ 06

மறைவு 2003 ~ 12 ~ 02



**திருமதி தனபாக்கியவதி நவரத்தினம்**

(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)

துயில் நீங்கி எழமுன்னரே மீளாத்துயிலில்
ஆழ்ந்து, எம்மை மீளாத்துயரில்
ஆழ்த்தி, எம்மை விட்டுப் பிரிந்து சென்ற
எம் அன்னையின் ஆத்மா சாந்தி அடைய
எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

எமது அன்புத் தாயாரின் மறைவுச்செய்தி அறிந்து அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரம்படி, கொக்குவில் கிழக்கு.

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(26354)(35-11-21)

## பட்டதாரி அல்லாத ஆங்கில ஆசிரியருக்கு டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணம்,ஜன.2

அரசாங்க பாடசாலைகளில் கற்பிக்கும் பட்டதாரி அல்லாத ஆங்கில ஆசிரியர்கள் பல்கலைக்கழகங்களில் ஆங்கிலத்தில் டிப்ளோமா கற்கைநெறியைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் மனிதவள அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதுபற்றிய மேலதிக விவரங்களைப் பெறவிரும்பும் ஆசிரியர்கள்-நவாலி சென்.பீற்றர் தேவாலயத்திற்கு அண்மையில் உள்ள எடியூசி கணனி நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-8-185)

## சிவத்தமிழ்ச் செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகத்துக்கு நூலகர் தேவை

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பவர் பெண்பாலாராகவும், மும்மொழிகளிலும் பேச வல்லவராகவும் தமிழ், ஆங்கில எழுத்தறிவும் நூலக அனுபவமும் 40-60 வயதுக் கிடைப்பட்டவராகவும் இருக்கவேண்டும். தகுந்த சம்பளமும், மதிய உணவும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 15-01-2004 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கீழ்க்காணும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

கலாநிதி செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி J.P.,**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(C/32366) (34-21-11)


யாழ் நகரில் ASIAN COMPUTERS வழங்கும் இலவச

# புதுமை கருத்தரங்கு

இந்தியாவிலிருந்து வருகை தரும்
பிரபல விரிவுரையாளர்

வெற்றியை இலக்காக கொண்டு அடுத்த கட்ட முன்னேற்றத்திற்காக காத்திருக்கும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுமதி இலவசம்!

O/L, A/L மாணவர்கள், பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்கள் கணனி மற்றும் தொழில்சார் பயிற்சி பெறும் இளைஞர் யுவதிகள் இக்கருத்தரங்களில் பங்குபற்றி பயனடையலாம்.

| | |
|---|---|
| யாழ் நகரில் | 10-01-2004 சனிக்கிழமை |
| சுன்னாகத்தில் | 10-01-2004 சனிக்கிழமை |
| நெல்லியடியில் | 11-01-2004 ஞாயிற்றுக்கிழமை |

முற்றிலும் வித்தியாசமான ஒரு கருத்தரங்கு

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புபவர்கள் கீழ்குறிப்பிட்ட எமது பயிற்சி நிலையங்களில் நேர விபரங்களையும், இலவச அனுமதிகளையும் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.

## ASIAN COMPUTER SYSTEMS

| | | |
|---|---|---|
| இல :2 G,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ 021-222 5677 | PRASHANNAA COMPUTERS STUDY CENTRE 108,K.K.S. வீதி, சுன்னாகம். ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 0777-878160 |



# Direct Start 2004

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு
ASIAN வழங்கும் COMPUTER பாடநெறிகளும்
**சிறப்புக் கட்டணச் சலுகையும்**

Registered with Ministry of Tertiary & Vocational Education

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

- Diploma in MS Office (DMO)
- Diploma in Computer Studies (DCS)
- Diploma in Computer Programming (DCP)
- Diploma in Desktop Publishing (DTP)
- Diploma in Web Design (DWD)



தமிழ் விளக்கங்களுடன் பயிற்சி

விசேட கட்டணச் சலுகை 3,750/- மட்டுமே! விரையுங்கள்!

- இலவச பாடநூல்கள்
- தவணைமுறை கட்டணங்கள்
- 100% செயல்முறை பயிற்சி
- ICM, UK ஆல் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- அனைத்து பாடநெறிகளுக்கும் காலம் 3 1/2 மாதங்கள்

மேலதிக விபரங்களுக்கு

## ASIAN COMPUTER SYSTEMS

| | | |
|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆021-222 5677 | PRASHANNAA COMPUTER STUDY CENTRE 108, K.K.S. வீதி, சுன்னாகம். ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 0777-878160 |

# அன்புவழி நின்று சிவப்பேறு அடைய செந்நெறி காட்டும் திருவாசகம்

மாணிக்கவாசகருக்கு குருபக்தி என்ற விதை அருச்சனை வயலுள் விதைக்கப்படுகின்றது. அது சிவ அன்புப் பயிராக உள்ளத்திற் செழித்து வளர்கின்றது. உரிய காலத்திற் பயனுள்ள அறுவடையாகப் பயன் அளிக்கின்றது. அந்தப்பயனே திருவாசகத்தைப் பிழிந்து எடுத்த சாறு. அந்தச் சாறு கருணைத்தேன்.

வம்பனாய்த் திரிந்தாரை வா என்று அழைத்து வடிதிரி சூலத்தார் வழங்கிய அருளாரமுதம் அத்துவித முத்தி. உலகவர் பித்தன் என்கிறார்கள். வித்தகனார் அவர் பத்திமை கண்டு சித்தம் என்னும் திண் கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்தார். மணிவாசகர் பேரா அன்பு பெருக்கினார். வாராத இன்பம் வாய்க்கப்பெற்றார். அதனால் கண்ணுதற் பெருமானைக் கற்றாவின் மனம் போலக் கசிந்து உருகிக்களிப்பார்.

மண்ணுலகத்தில் மானுடப் பிறப்பின் மாட்சிமை எல்லாம் மனதில் தங்கி இருக்கின்றது. மனம் போன போக்கில் அலைய விடக்கூடாது. அன்பு நாரினால் மனத்தறியில் இறைவனுடைய திருப்பாதத்தை இறுகப் பிணைத்துக் கொள்ளவேண்டும். அந்த நிலைநின்று தன்னை அறிய வேண்டும். மணிவாசகர் தம்மை அறிந்து கொண்டாராதலின், "யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்" என்று உணர்ந்து கொண்டார். உணர்ந்தவர் உண்மை அன்பை ஆராய்ந்தார். 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு' மெய்யன்பு எனக் கண்டார். சிவபிரானிடத்தில் மெய்யன்பர் ஆனார்.

### மெய்யன்பு

பொய்யன்பிற்கு கருணை காட்டும் மெய்ப்பொருள் வாதவூரரின் மெய்யன்பு கண்டு வாளா இருப்பாரா? கருணைக்கடல் கருணை புரிந்தார். உள்ளம் உருகிக் கள்ளம் கைவிட்டு வெள்ளம் போலக் கண்ணீர் பெருக்கும் பேரன்பாளருக்காக நிலவுலகத்தில் எழுந்தருளி வந்தார். நீண்ட கழல்கள் அணிந்த திருவடிகளோடு, செந்தாமரைக்காடனைய தனிச்சுடர்த் திருமேனியைத் தந்தருளினார். உன்னாதார் உள்ளத்தில் ஒளிந்திருக்கும் ஒளிவடிவினர் எம்பெருமான். மாணிக்கவாசகரின் கன்னெஞ்சைக் கனிவித்தார். நீராய் உருகியது. உயிர்க்கு உயிரானார். உள்நின்று உணர்த்தாது உணர்த்தினார். இரும்பு மனத்தை இழுத்து இழுத்து எலும்பிற்கும் உயிர் ஊட்டினார். திருவடிகள் கரும்பை ஒத்த சுவையினைத் துய்க்க வைத்தார். அந்த அனுபவத்தில் மணிவாசகர் தன்னையும் அறியார். பகல் இரவு வேறுபாடு படுத்துணராதவரானார்.

### சொற்றிறம்பாமை

மண்ணுலகத்தில் கணவன் மனைவியர் கற்பு எனப்படுவது சொற்றிறம்பாமை. அதுபோலப் பூலோக சிவலோக வாழ்வில் சிற்றுயிரைப் பெருங்கருணைப் பேராற்றுப் பெருவெள்ளத்திற் பிணித்துப் பிற தெய்வத்திற் பெயரவிடாது காப்பது கற்பு. அது தெய்வத்திடம் பிரியாத பேரன்பு தெய்வக் கற்பு எனலாம்.

அமுதை, அமுதின் சுவையைச்சார்ந்து தழுவப் பெறுவது எந்நாளோ! "உமை பங்கா! திங்கள் தங்கிய சடையாய்! சிவபுரத்து அரசே! திருப்பெருந்துறை உறைசிவனே! நின்னருள் பெற்றுக் கொள்ளப் பிறரை வணங்குவேனோ? துதிப்பேனோ? அவரை எனக்கு ஒரு துணை என நினைப்பேனோ? நின் திருவருளை நீயாகத்தர யான் பெறேனாயின் வாழுமாறு இல்லேன். "அரசே! பொன்னம்பலத்து ஆடும் அமுதே! நின்னுடைய திருவருளை எதிர்நோக்கி, நறிய உணவினை நாடிநிற்கும் நாரை



யானேன். இரவு பகலாக விழைந்து பயன் பெறாது வருந்துகின்றேன். "அன்று என்னை ஆற்றுதற்கரிய கற்பு முறைகளைக் கற்பித்து ஆண்டாய்! இன்று நீ கைவிட்டால் உரித்து இல்லாதவர் மாடுபோல் ஆவேனோ?" "அன்று என்னை அடிமை கொண்ட போது என் உடல், பொருள், ஆவி அத்தனையையும் உன்னுடையனவாகக் கொண்டாய் அல்லவோ - இன்று என்னை உடலோடு துன்புறுத்துவாய்; திருவடிக்கீழ் இன்புறுத்துவாய் நான் அடிமை - அதிகாரி நீ அல்லவோ....

"என்னுள்ளத்தில் எழுகின்ற மேலான ஒளிவடிவினனே! இன்பத்திற்குரிய பதங்களை எல்லாம் கடந்து நின்ற இன்பவடிவினனே! என்னுடைய அன்பிற்கு உயிராக இருப்பவனே! புகழினையுடைய சிவபுரத்தரசே! அடியேனுடைய உயிரோடு உடம்பும் உணர்வும் இன்பமயமாய்க் கசிந்து உருகுமாறு இனிய திருவருளை எனக்குத் தந்தாய்!

தனன். "கொடியேனுடைய ஊன் பொருந்திய உடம்புகள் தோறும் உள்ளத்தைக் கோயிலாகக் குடிகொண்டனன். இனியதேனைப் பாய்ச்சினன். நிரம்பிய ஆச்சரியகரமான அமுத ஒழுக்குகளை என்புத் துளைகள் தோறும் ஏற்றினன். "இடையறாது உருகும் உள்ளத்தைக் கொண்டு ஓர் உடலைச் செய்ததுபோல எனக்கு அன்பு கசிந்து ஊறும் உடலைத் தந்தனன். நான்முகன், நாரணன் நாடொரை நற்பொருள்.

"விளக்கம் பொருந்திய கரும்பின் இனிமையை மீண்டும் நுகர்தற்கு அவாவியிருக்கும் களிறுபோல் என்னை இவ்வுலகத்தில் இருக்கச் செய்தனன்.

மெய்யன்பர்களால் அன்றி அறிய ஒண்ணாதவர் சிவபெருமான். அவர் எங்குமாகி எல்லாமாகவும் அல்லவுமாகவும் இருப்பார். பாடுபவர்களுக்கு இரங்குவார். பிறவிப் பிணியை நீக்கும் மருந்துமாவார். தாமாக எழுந்தருளி வந்து மாணிக்கவாசகருக்குப் பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்தவர். கற்புநெறி காட்டி அன்பினை வளர்த்தவர். பல்லோரும் காண மாணிக்கவாசகருக்கு முத்திப்பேற்றை முன்னின்று அருளினர். ஒருவர் அந்நெறி அறிந்து ஒழுங்கின் செந்நெறி நின்று சிவப்பேறு பெறலாம். இவ்வாறான பேருண்மைகளைப் பெறலாம் என்ற தத்துவத்தை நமக்கு திருவாசகச் செம்பொருள் உணர்த்துகிறது.

நன்றி: ஞானச்சுடர்.

# சைவசித்தாந்தம் கற்ற மாணவர்கள் சுவீடன் பல்கலை. பட்டதாரியாகலாம்!

## அந்நாட்டுப் பேராசிரியர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

சைவசித்தாந்தம் கற்ற மாணவர்கள் சுவீடன் மொழியில் தேர்ச்சிபெற்றால் சுவீடன் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாக முடியும்.

- இவ்வாறு தெரிவித்தார் சுவீடன் உப்சாலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் வுல்க்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை மண்டபத்தில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் அவர் கலந்துகொண்டார். அங்கு அவர் 'துயர்துடைக்கும் சித்தி விநாயகர் - புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் வழிபடு தெய்வம்' என்ற தலைப்பில் உரையாற்றினார். அந்த உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் சமய வழிபாட்டு முறைகளில் நம்பிக்கையுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்களில் சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் சுவீடனில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் பலவேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். தமக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களிலிருந்து விடுதலைபெற அவர்கள் தெய்வ வழிபாட்டில் அதிக நம்பிக்கையுடன் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, விக்கினங்கள் தீர்க்கும் விநாயக வழிபாட்டில் அவர்கள் அதிகம் ஈடுபடுகின்றனர்.

எதிர்காலத்தில் துன்பம் நீங்கி தாய் நாட்டில் மீண்டும் வந்து அமைதியாக வாழ்வதற்கு அவர்கள் விரும்புகின்றனர்.

இங்கு சைவசித்தாந்தத்தை சிறப்புப் பாடமாகக் கற்கும் மாணவர்கள் சுவீடன் மொழியைப் பயின்று தேர்ச்சி பெற்றால் சுவீடனில் உள்ள உப்சாலா பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பை மேற்கொள்ள முடியும். இது தொடர்பாகப் பல்கலைக்கழகச் சங்கங்களுக்கு இணைப்புத் திட்டம் இருந்து வருகிறது.

சுவீடனில் 'உப்சாலா' பல்கலைக்கழகத்தில் திருமதி சந்திரலேகா வாமதேவன் கலாநிதிப் பட்டம் பெற்றார். அதேபோல மலையகத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் மலையகத்தில் முருகவழிபாடு பற்றி ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்துக் கலாநிதிப்பட்டம் பெற்றார்.

அதுமட்டுமல்லாது, யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் பலர் உப்சாலா பல்கலைக்கழகத்தில் விரிவுரை நிகழ்த்தியுள்ளனர்.

ஆகவே, இங்குள்ள பிறரும் சுவீடன் பல்கலைக்கழக கற்கை நெறிகளில் இணையும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

(ஒ-5)

# 'அன்போடு உருகி அகங்குழைவோம்'

நமது ஊர்க்கோவில்களில் பலவிதமான பூஜைகள் நடைபெறுகின்றன. தேங்காய், பழ பூஜைகள், பாயாசம், பலகாரம் படைத்து பூஜை செய்வது, பால், நெய், தேன் அபிஷேக பூஜை செய்வது இப்படிப் பலவிதமான பூஜைகள் தினமும் நடைபெறுகின்றன. இப்பூஜை செய்பவர்களைக் கேட்கும்போது "இப்பூஜையை நேர்த்திக் கடனுக்காகச் செய்கிறேன், ஒரு காரிய பலனுக்காகச் செய்கிறேன், கஷ்டங்கள் நீங்கப் பூஜை செய்கிறேன்", ஒரு வேண்டுதலுக்காக வேண்டி இப்பூஜை செய்கிறேன்" இப்படி அநேகர் சொல்கிறார்கள்.

"நான் குறித்த காரியத்தில் வெற்றி பெற்றால் 101 தேங்காய் உடைக்கிறேன்" என்று ஒருவர் கூறுகிறார். "எனக்கு வேலை கிடைத்தால் வெண்பொங்கல் வைத்துப் பூஜை செய்கிறேன்" என்று இன்னொருவர் கூறுகிறார். "என் வாழைத் தோட்டத்தில் வாழை மரம் நல்ல பயனைத் தந்தால் இரண்டு வாழைக்குலைகளை வைத்துப் பூஜை செய்கிறேன்" என்று இன்னுமொருவர் சொல்கிறார். "இந்த இடத்தை நான் வாங்கினால் கடவுளே உனக்குப் பாலபிஷேகம் செய்வேன்" என்று மற்றொருவர் கூறுகிறார். "குழந்தை சுகமாகப் பிறந்தால் சர்க்கரைப் பொங்கல் போடுவேன்" என்று பிறிதொருவர் கூறுகிறார். இப்படி ஏதாவது ஒரு காரணத்துக்கு கடவுளுக்குப் பூஜை செய்யும் வழக்கம் நம்நாட்டில் பெருகி விட்டது. இதனால் இப்பூஜையைப் பற்றி நாம் சற்று ஆழ்ந்து சிந்திப்பது அவசியம்.

பூஜை என்றால் கடவுளுக்குச் செய்யும் அன்பு (பக்தி) உபசாரம் ஆகும். நோயாளி, கர்ப்பிணிப்பெண், சிறு குழந்தை போன்றோர் இருக்கும் இடங்களுக்கு வெறும் கையோடு போகக் கூடாது என்று பெரியோர்கள் சொல்வார்கள். காரணம், அன்பு உபசாரம் செய்யும்போது ஏதாவது ஒருபொருளைக் கொடுத்து உபசாரம் செய்ய வேண்டும். கடவுளுக்கு அன்பு உபசாரம் செய்வதைப் பற்றி கீதையில் பகவான் கூறுகிறார்.

பகவத்கீதை 9 ஆவது அத்தியாயம், 26 ஆவது சுலோகத்தில் "எவன் எனக்குப் பக்தியுடன் பச்சிலையோ, புஷ்பமோ, பழமோ, தீர்த்தமோ அர்ப்பணிக்கின்றானோ பக்தியுடனும், தூய்மையுடனும் சமர்ப்பிக்கப்பட்ட அப்பொருளை நான் புசிக்கின்றேன்" என்று கூறுகிறார்.

எனவே, அன்பு (பக்தி) இல்லாத பூஜை பலன் தராது. ஒரு வேண்டுதலுக்காக அல்லது ஒரு காரிய நிவர்த்திக்காகச் செய்யும் பூஜை வியாபார பூஜையாகும். அன்பு (பக்தி)டன் செய்யும் பூஜையே உண்மை பூஜை ஆகும்.

நமது நாட்டில் அரசியல்வாதிகளுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் லஞ்சம் (நன்கொடை) கொடுத்தால் நினைத்த காரியங்களைச் சாதிக்க முடியும். ஆனால், கோவிலில் கொடை கொடுத்தால் நினைத்த காரியம் சாதிக்கமுடியாது. காரணம், மனிதனுக்கு உலகப் பொருள்களைக் கொடுத்தால் ஏமாந்துவிடுவான். அதுபோல் கடவுளுக்கு உலகப்பொருள்களைக் கொடுத்து ஏமாற்றமுடியவே முடியாது. கடவுளுக்கு உலகப்பொருள்கள் எதுவுமே அவசியம் இல்லை; காரணம் இந்த உலகத்தைப் படைத்தவரே அவர்தான். இந்த உலக உயிர்களைப் படைத்ததும் கடவுள். இந்த உலகப் பொருள்கள் அனைத்தையுமே படைத்ததும் கடவுள். எல்லாவற்றையும் படைத்த கடவுளுக்குப் பலபொருள்களைத் தருகிறேன் என்று மனிதர்கள் சொல்வது தென்னை மரத்துக்கு ஒருதேங்காய் கொடுப்பது போல் ஆகும்.

அன்பை (பக்தி) வளர்ப்பதற்கே கடவுளுக்குப் பூஜை செய்கிறோம் என்பதை மக்கள் மறந்துவிட்டார்கள். ஆடம்பர பூஜையாலோ அல்லது உயிர்ப்பலி பூஜையாலோ பக்தியை வளர்க்கமுடியாது. அகங்காரம் வளர்ந்துகொண்டே போகும். எனவே, கடவுளுக்கு வியாபார ரீதியான பூஜை செய்வதை விட்டுவிட்டு அன்பு ரீதியான பக்திபூஜை செய்வோம். "அன்போடு உருகி அகங்குழைவார்க்கன்றி என்பொன் மணியினை எய்த ஒண்ணாதே" என்பது திருமூலரின் திருமந்திர வாக்கு. எனவே, கோவிலுக்குச் சென்று அன்போடு உருகிக் கடவுளுக்குப் பூஜை செய்வோம்.

(நன்றி:- வேதமுரசு)



நவாலி வடக்கு, தேற்றா மரத்தடி ஸ்ரீஞானவைரவர் ஆலய புனருத்தாரண அபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. அப்போது சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ ச.சி.பால சண்முகக் குருக்கள் கிரியைகளை நடத்தி வைத்தார். அந்தச் சமயத்தில் எடுக்கப்பட்ட படம் இது. (ஒ-17)

# ஞானக்கதிர்

"இறைவனே! உத்தமனே! உன்னை அல்லாது பிற கடவுளரை மனத்திலும் கருதேன்" எனப் பிறிதோரிடத்தில் மாணிக்கவாசகர் உண்மை சாதிப்பர்.

"தென்னாடுடைய சிவபிரான் யான் காண ஒண்ணாதவை எல்லாவற்றையும் காட்டினான்; செம்பொருளாகிய சிவத்தைக் காட்டினான்; தனது திருவடித் தாமரைகளையும் காட்டினான்; அருள்தேனைக் காட்டினான்; நாட்டார் நகைக்க வைத்தான்; நாம் மேலான வீட்டினை எய்துவித்தான். "என் செல்வமே! எனது உடம்பை உருக்கினாய். உருகும் தோறும் உள்ளத்தே ஒளி பெருகுமாறு செய்தாய். அழிவில்லாத இன்பத்தேனைப் பொழிந்தாய். என்னைப் பயிற்றப் புறம்புறம் திரிந்தவர் சிவபெருமான்."

### ஆடும் அமுதே

இவ்வாறு இன்பரசத் தேன் பருகிக் கற்புநெறி ஒழுகிய மணிவாசகர் மாசில்லாத மணிக்குன்று மறையும் போது படும்பாடு சொல்லொணாது. "அயனும் மாலும் இந்திரனும் ஏனைய தேவர்களும் சங்கற்பித்துப் பேராதரிக்கும் பெம்மானை, சொல்லும் பொருளும் கடந்த சோதியை நெல்லிக் கனியை, தேனை, பாலை, இனிய

"நிறைவுடைப் பொருளே! நீக்கு தற்கரிய கோது என்பதே இல்லாத கோமளக் கொழுந்தே; ஒளிமலைப் பிழம்பே! என் உடலை நீ வாழ் குடிலாகக் கொண்டாய். இங்கும் அங்கும் எங்கும் பிறிது ஒரு பொருள் இல்லாத நின் இயல்பினை நினைப்பு அற்று நினைநதேன். நீ ஒரு பொருள் அல்லை ஆனாய். நின்னை அன்றி ஒரு பொருள் அல்லையும் ஆனாய்.

இவ்வாறு வாதவூரர் வடிவுடை மழு ஏந்தும் பொடியணித் திருமேனியரை நினைந்து, நைந்து உருகிப் பிரிவுத்துயராற் பெறும் வேதனை பெரிது பெரிது. மனவாசகங்கடந்தோனை மணிவாசகங்களாற் பாடும் பண்சுமந்த பாடல்கள் படிப்போரைப் பரவசப்படுத்துவன. பகதியில் ஆழ்த்துவன. பராபரப்பொருள் பக்தரின் படுதுயர்பார்த்தது. தாயேயாகிப் பரிந்து வந்து பரிதவிப்பு நீக்கியது; பரமானந்தம் அருளியது.

### வழித்துணை மருந்து

மாணிக்கவாசகர் வழித்துணை மருந்தினிடம் வைத்த இறை அன்பினாற் பெற்ற இறை இன்பத்தையும் வாயூறி வாழ்த்துவார்: "சொல்லால் உணர்தற்கரிய அமுதத்தை என் மயிர்க்கால் தோறும் நிறையச் செய்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### திருமண வைபவத்திற்கு

திருமண வைபவத்திற்கு ஏற்ற 2003 மொடல் கார் (Perl Silver நிறமுடையது) மற்றும் A/C வான்களும் நாள் கணக்கிற்கு வாடகைக்கு உண்டு. தொடர்பு: Joseph, இல.72, றக்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம (பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில்). T.P.: 7080, 2597. (25903)

### வீடு விற்பனைக்கு

புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறையில் 3 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை. T.P. 0777 570279, 0777 305533 (சி-31984)

யாழ்ப்பாணம், தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளுடன் கூடிய ஓரளவு புதிய வீடு விற்பனைக்கு உண்டு. காலை 9.00 மணி வரை மட்டும் பார்வையிடலாம். தொடர்பு: 25/11, அரசடிலேன், கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P 0777 031154. (26619)

### காணி விற்பனைக்கு

கைதடி - நுணாவில் வைரவர் கோவில் சந்திக்கும் அறவழி நிலையத்திற்கும் இடையில் கண்டி வீதியுடன் ஒன்பது பரப்பு காணி, கிணற்றுடன் விற்பனைக்குண்டு. வீடு, கடை கட்டுவதற்கு பொருத்தமானது. தொடர்பு: திரு.நா.அருட்சோதி அதிபர், கைதடி - நுணாவில், சாவகச்சேரி. (26649)

### தவறிவிட்டது

முத்துச்சாமி கணேசலிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (673241476V) 30.12.2003 அன்று முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மு.சிவலிங்கம், தாவடி தெற்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (26628)

மாசிலாமணி அன்னம்மாவின் அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை, வீரசிங்கம் பவானி என்பவருடைய தேசிய அடையாள அட்டை, சமூர்த்தி புத்தகம், ஊர்காவற்றுறை மக்கள் வங்கி புத்தகம், தபால் கந்தோர் பாஸ் புத்தகம் என்பன மினிபஸ்ஸில் கைமாறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம் ஜெகதீஸ்வரன், லக்சிமிக்சர் ஸ்ரோர்ஸ், பலாலி வீதி, நல்லூர். (26639)

### நாயைக் காணவில்லை

13 வருடங்களாக செல்லமாக வளர்த்த பிறவுண் கலரும், சடைவாலும் ஒருசெவி மடிந்தும் ஒருசெவி நிமிர்ந்தும் கழுத்தில் பட்டியிடப்பட்டதுமான "ஸ்பாக்" என்ற நாயை 23.12.2003 முதல் காணவில்லை. இதனைக் கண்டவர்கள் இல.18, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள செல்வா என்பவருக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.:3252,2429. (26550)

### மாதகல் சந்தையில் மலசலகூட வசதியில்லை

இளவாலை,ஜன.2

மாதகல் பொதுச்சந்தையில் மலசலகூட வசதியில்லாமையால் அங்கு வரும் வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதுபற்றி பண்டத்தரிப்புக் கிராம சபையிடமும், இளவாலைப் பொதுச் சுகாதார பரிசோதகர் சி.திருநிறைச்செல்வனிடமும் முறைப்பாடு செய்யபட்டுள்ளது. (ம-48)

### சந்நிதியான் ஆச்சிரம திருவாசக விழா

யாழ்ப்பாணம்,ஜன.2

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமம் நடத்தும் வருடாந்த திருவாசக விழா சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையினை [illegible]லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம[illegible]தர தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நிகழ்த்துவார். தமிழ்நாடு பேரூர் ஆதீன முதல்வர் தவத்திருசாந்தலிங்க இராமசாமி அடிகள், தமிழ்நாடு தர்மபுர ஆதீனம் டாக்டர் ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் ஆகியோர் சிறப்புரைகளை வழங்குவார்கள் தொடர்ந்து திருவாசகப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். (ஓ-ரி)

---

## ஆசிரியர் தெரிவுப் போட்டிப்பரீட்சை

| வழிகாட்டி நூல் விலை 90/= | த.தவசேகர் |
|---|---|

- பிரபல புத்தக நிலையங்களிலும், வகுப்புகளிலும் விற்பனைக்கு வந்துவிட்டது.
- 20-01-04இற்கு முன்னர் புத்தகத்தில் உள்ள விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து வகுப்புகளில் ஒப்படைக்கவும்.

(26635)(35-21-11-19)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



புங்குதீவு மண்ணின் மைந்தனும் ஊரதீவு ப.நோ.கூ. சங்கத்தின் தலைவரும், புங்குடுதீவு - நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளரும், புங்குடுதீவு ஐக்கிய அபிவிருத்திச் சங்கம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தீவகப் பிரிவு ஆகியவற்றின் செயலாளரும், புங்குடுதீவு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொருளாளரும், புங்குடுதீவு பாணாவிடை சிவன ஆலய தர்மகர்த்தா பரிபாலன சபையின் பொதுப் பிரதிநிதியும் ஊரதீவு கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையம் புங்குடுதீவு இளந்தமிழர் மன்றம் ஆகியவற்றின் முன்னாள் தலைவரும் புங்குடுதீவு கணேச மகாவித்தியாலய அதிபருமான

### உயர்திரு. S.K. சண்முகலிங்கம்

அவர்கள் 24.12.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி ச. இளங்கோவன் அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்தம் சேவை மேன்மேலும் வளரவும், பல்லாண்டு காலம் வாழவும், உயர்வுபெறவும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

திரு.திருமதி நா.நாகராஜா குடும்பம்,
அதிபர் யா/மெலிஞ்சிமுனை றோ.க.த.க. வித்தியாலயம்.
ஊர்காவற்றுறை.

12ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (26575) (26-21-19-11)

---

## இரண்டாம் ஆண்டு நினைவு

மண்ணில் மலராக
26 ~ 04 ~ 1943



விண்ணில் ஒளியாக
25 ~ 12 ~ 2001

### தம்பையா நவரட்ணம் (சந்திரன்)

திதி : 02-01-2004

உதிராத நினைவுகளுடன்
உங்கள் உதிரச் செடிகள்...!

பட்டினசபை வீதி,
மானிப்பாய். (26605)(35-21-11-19)

துயருடன்:
மனைவி, பிள்ளைகள்

---

## நீங்காத நினைவலைகள்

ஒன்பதாம் ஆண்டு



- அமரர்
சின்னையா ஜெயசிங்கம்

முதலாம் ஆண்டு



திருமதி
ஜெயசிங்கம் தெய்வானை

27-06-1914 ← தோற்றம் → 18-06-1923
07-11-1995 ← மறைவு → 12-01-2003

ஆரத்தழுவி அன்புமொழி கூறி சிந்தை
மகிழ வைத்து பாரினிலே எம்மைப் பண்புடனே
வாழ வைத்தவர்களே எமது வாழ்வுதனைப்
பார்த்து மகிழ - இன்று எம்மோடு நீங்கள்
இல்லையே! அன்புத் தெய்வங்களே
எம்மைவிட்டு ஏன் சென்றீர்கள்? இன்னும்
சில நாள்கள் எங்களுடன் இருந்திருக்கக் கூடாதா?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய மருதடி விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.*

தகவல்:
மகன்: கமலன்,
Colombo-4. (2[illegible] [illegible]4-11-19)

என்றும் உங்கள்
நினைவோடு வாழும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கல்வயல், சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 819/1, மருத்துவமனை வீதியை வதிவிடமாகக் கொண்டவரும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும், யாழ்.உயர் நீதிமன்ற முன்னாள் யூரரும், உலக சைவப்பேரவை (இல. கிளை) இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ். கிளை, தென்மராட்சி ஓய்வூதியர் சங்கம் ஆகியவற்றின் ஆயுட்கால உறுப்பினரும், யாழ்.ப.நோ.கூ. சங்க பொதுச்சபை, உபசபை உறுப்பினரும், நல்லூர் பஜனைக்குழு உறுப்பினரும் ஓய்வுபெற்ற கால்நடை போதனாசிரியருமான

### திரு.ஆர்.வீ.கந்தசாமி

அவர்கள் 22-12-2003 இல் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது ஆன்மீக பொதுச்சேவை மென்மேலும் சிறப்புற எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

84, கனகாம்பிகை குளம்,
கிளிநொச்சி. (26641)(21-19-11)

சகோதரன்:
வே.இராமநாதன் குடும்பம்.

---

## நல்லூர் பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல் - 2004

15-01-2004ஆம் திகதி முதல் 31-12-2004ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப்பணம் | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| 1. கோண்டாவில் வடக்கு, அரசடி வீதி. மீன்சந்தை. | 100.00 | 500.00 | 1,115.00 |
| 2. கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 350.00 | 5,000.00 | 50,342.50 |

- கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி:-
  08.01.2004 வியாழன் 12.00 மணிவரை.
- கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி:-
  09.01.2004 வெள்ளி 10.00 மணிவரை.
- கேள்விப் பத்திரம் திறக்கும் திகதி:-
  09.01.2004 வெள்ளி 2.00 மணிக்கு.

மேலதிக விவரங்களை நல்லூர், கொக்குவில் பிரதேச சபை உப அலுவலகங்களிலும் பிரதேசசபை தலைமைச் செயலகத்திலும் காரியாலய நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

புஸ்பமலர் சிவலிங்கம்,
செயலாளருக்காக
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
31-12.2003. (C32375)(34)

---

புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால்
யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும்

01. சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்)
02. அரிசி (தீட்டல் பச்சை)

## வழங்கலுக்கான கேள்வி கோரல்

மேற்படி கேள்விக்குரிய காலஎல்லை பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

01. விண்ணப்பிக்கும் கடைசித் திகதி:
    16.02.2004 பி.ப. 2.00. மணி
02. கேள்வி திறக்கும் நேரம்:
    16.02.2004 பி.ப. 3.00 மணி (சிவப்பு நாட்டரிசி)
03. கேள்வி திறக்கும் நேரம்:
    16.02.2004 பி.ப. 4.00 மணி (அரிசி தீட்டல்பச்சை)

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம். (C/32378)(34-21-11-19)

---

## மரண அறிவித்தல்

### செல்வி சின்னையா குணசவுந்தரவல்லி

(Maax Pharmacy - Colombo - 11)

சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சின்னையா குணசவுந்தரவல்லி 29-12-2003 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மகளும் மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற சுகிர்தவதி, லோககுகதாசன் (இலங்கை மின்சாரசபை, ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்), காலஞ்சென்ற திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்வநாயகம் (சாமுவேல் அன்சன்ஸ் முன்னாள் ஊழியர்) மற்றும் சந்திராவதி (ஆசிரியை, கொழும்புதுறை இந்து மகாவித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனியும் சாந்தினி (கனடா), மதிவாணன் (கனடா), குமுதினி (கனடா) ஆகியோரின் சிறியதாயாரும் கிறிஸ்கீசனின் (உயர்தர வகுப்பு மாணவன், யாழ். பரியோவான் கல்லூரி) அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2004) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,*
*சுண்டிக்குழி,*
*யாழ்ப்பாணம்.* (26640)(34-11-19-21)

தகவல்:
சி.லோககுகதாசன்
(சகோதரர்).

# இறக்குமதியில் தங்கியிருக்காது ஏற்றுமதியைப் பெருக்கவேண்டும்

## "கில்ஸ் எக்ஸ்போர்ட்" அதிபர் வீரசிங்கவின் துரிதகால தொழில் முன்னேற்றம்

*கேள்வி:* சுமார் எட்டு லட்சம் ரூபாவைக் கடனாகப் பெற்று மரமுந்திரிகை வியாபாரத்தை ஆரம்பித்தீர்கள். இன்று முன்னேற்றகரமான நிலைக்கு வந்துள்ளீர்கள். இதன் பின்னணி பற்றி விளக்குவீர்களா? எப்படி இந்தத் துறையைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

*பதில்:* நான் பாடசாலைக் கல்வியை முடித்ததும் தொழில் தேடும் முயற்சியில் இறங்கவில்லை. ஏதாவது வியாபாரத்தில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணத்துடன் தொழில்சார் பயிற்சி வகுப்புகளில் பங்கேற்றேன். அந்தவகையில், விவசாயத்துறையை சார்ந்த விடயங்களில் கவனம் செலுத்தினேன்.

இலங்கையில் அதற்குரிய வளங்கள் நிறைய உள்ளன. எனவே, எனது கவனம் அதைச் சுற்றிச்சுற்றியே வந்துகொண்டிருந்தது. அதன்படி, அந்த உற்பத்தியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும் என்ற அவாவும் என்னை உறுத்திக் கொண்டேயிருந்தது.

அப்போது மரமுந்திரிகை பற்றி எனது உறவினர் ஒருவர் யோசனை கூறினார். அவர், இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தில் தொழில புரிகிறார். அவரின் ஆலோசனை பெற்று இந்த வியாபாரத் துறையைத் தேர்ந்தெடுத்தேன்.

*கேள்வி:* நீங்கள் இந்தத் துறையில் பிரகாசிப்பதற்கு நிதி தொடர்பான ஊக்குவிப்பு வழங்கியவர்கள் பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* உண்மையில் நான் தேர்ந்தெடுத்த துறைக்கு விசாலமான நிதியுதவி தேவைப்படும் என்பதை எனது அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொண்டேன்.

மரமுந்திரிகை ஒரு தொன் கொள்வனவு செய்வதென்றால் சுமார் ஐந்தரை லட்சம் ரூபா தேவைப்படும். எனக்கு இப்படியான ஒருதொகையை முதலீடு செய்வதற்கான வாய்ப்பு இருக்கவில்லை. மிகச்சிறிய நிலையிலேயே இதை செய்துகொண்டிருந்தேன்.

எனது தகப்பனார் அரசின் ஒரு சாதாரண ஊழியராகக் கடமையாற்றி



**ரி.என்.எல். தொலைக் காட்சியில் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் என்.பி.வீரசிங்கவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குரூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர். அப்போது தனது அனுபவத்தை என்.பி.வீரசிங்க விளக்குகிறார்.**

ரி.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர நிகழ்ச்சியில் கடந்த 30ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் ''கில்ஸ் எக்ஸ் போர்ட்'' தனியார் நிறுவன அதிபர் என்.பி.வீரசிங்க.

**வர்த்தக ஸ்பெஷல்**

குருநாகல் மாவட்டத்தில் செலான் வங்கியின் கடன் அனுசரணையுடன் மரமுந்திரிகை தயாரிக்கும் நிறுவனமொன்றை நிறுவி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலைக்குத் தனது வியாபாரத்தை விரிவுபடுத்தி ஒரு முன்னேற்றகரமான நிலைக்குக் கொண்டுசென்றுள்ள இளைஞன் என்.பி.வீரசிங்க தனது விடாமுயற்சி பற்றி விளக்குகிறார்.

ரி.என்.எல். தொலைக்காட்சயில் தொழில் அதிபர் வீரசிங்கவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறுப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

னார். இதன் காரணமாக நான் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் வங்கிகளில் கடன் உதவி கேட்டு விண்ணப்பித்தேன். ஆனால், எனக்கு யாரும் உதவ முன்வரவில்லை. இருந்தபோதிலும், எனது வியாபார முயற்சியைக் கைவிடமாட்டேன் என்ற உறுதிப்பாட்டுடன் இருந்தேன்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் தான் வடமேல்மாகாண முதலீட்டுச் சபையின் தலைவரான சிலிங்கோ நிறுவனங்களின் அதிபர் தேசமான்ய லலித் கொத்தலாவல குருநாகலுக்கு வந்தார். அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் நான் அவரைச் சந்தித்து எனது வியாபாரம் தொடர்பான அறிக்கையைக் கையளித்தேன்.

அவர் அதனை ஆராய்ந்து பார்த்த பின்னர் உடனடியாகவே எனக்கு உதவி வழங்க முன்வந்தார். 1996 ஆம் ஆண்டு சிறிய அளவில் மரமுந்திரிகை (கஜு) செய்கை ஆரம்பித்த போதும் அதைப் பரந்த அளவில் செய்வதற்கு சிலிங்கோ நிறுவனம் துணைபுரிந்தது.

உடனடியாக எட்டு லட்சம் ரூபா கடன் வழங்கி என்னை ஊக்குவித்தது. இன்று எனது மரமுந்திரிகை (கஜு) சர்வதேச தரத்துடன் போட்டியிடும் நிலைக்கு அதைத் தரப்படுத்தி உள்ளேன். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதே எனது அடுத்த கட்ட முயற்சியாகும்.

*கேள்வி:-* உங்களின் இந்த வியாபாரத்துறை மூலம் எத்தனை பேர் பயனடைந்துள்ளனர்? எத்தனை பேர் தொழில்வாய்ப்புப் பெற்றுள்ளனர்?

*பதில்:-* உண்மையிலேயே எனது குடும்ப அங்கத்தினர் மூன்று பேர் மட்டுமே இந்தத்துறையை ஆரம்பித்தோம். இன்று ஆறு பேர் வேலை செய்கிறார்கள். அவர்கள் நிறுவனத்தின் பங்குதாரர்களாகவே செற்படுகின்றனர். அதுமட்டுமன்றி, சுமார் பத்துக் குடும்பங்கள் நேரடியாக இதில் பயனடைந்து வருகின்றன. கிராமப்புறத்தில் மிகவும் பின்தள்ளப்பட்டவர்களுக்கே இதன்மூலம் வாய்ப்புகளை வழங்கியுள்ளேன்.

*கேள்வி:-* கில்ஸ் எக்ஸ்போர்ட் பிறைவேட் லிமிட்டெட் நிறுவனத்துக்கு சிலிங்கோ நிறுவனத்தின் ஊடாக 7 லட்சம் ரூபா மட்டுமே கடன வழங்கப்பட்டது. இதன்மூலம் தரமான மரமுந்திரிகை (கஜு) பக்கட் செய்து சர்வதேச தரத்துக்கு ஈடாகத் தயாரித்துள்ளீர்கள். இது வரவேற்கப்பட வேண்டிய விடயம். தொடர்ந்தும் எத்தகைய முன்னேற்றத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளீர்கள்.

*பதில்:-* நான் சுயதொழில் வாய்ப்புப் பற்றி பல்வேறு குறிப்புக்களைச் சேகரித்து வைத்திருந்தேன். அதன் தொகுப்பொன்றை மாணவர்களின் பயன்கருதி அச்சிட்டு வெளியிட்டேன். அது பலருக்குப் பயனளித்துள்ளது.

எனது நிறுவனத்தில் தொழில் புரிபவர்களை ஊழியர்களாக நான் கருதவில்லை. அவர்களை எனது பங்குதாரர்களாகவே கருதுகின்றேன். வெளிநாட்டுப் பொருள்களை இங்கு கொண்டுவருவதைவிட எமது நாட்டு உற்பத்திகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யவேண்டும் என்பதே எனது குறிக்கோளாகும். அதனால், பயன் அடைவது நாம் மட்டுமல்ல நமது நாடும் கூடத்தான்.

- இவ்வாறு என்.பி.வீரசிங்க தெரிவித்தார்.

# தமிழ்மொழிமூல ஆசிரியர்களின் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கக்கோரி பிரதமருக்கு சம்பந்தன் எம்.பி. கடிதம்

கொழும்பு,ஜன.2

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தமிழ்மொழி மூலபாடசாலைகளில் தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்கு நிலவும் பற்றாக்குறை தொடர்பாகவும், அதை நிவர்த்தி செய்யும்வகையில் நியமனங்களை உடன் வழங்க வேண்டிய அவசியம் பற்றியும், தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., பிரதமர் ரணிலுக்கு நீண்ட கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ்மொழிமூல பாடசாலைகளுக்கு ஜி.ச.ஈ. உயர்தரத் தகுதிபெற்றவர்கள் ஆயிரம்பேரை ஆசிரியர்களாக நியமனம் செய்வது தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2000 ஆம் ஆண்டில் அமைச்சரவை இந்த ஆள்சேர்ப்புக்கு அங்கீகாரம் வழங்கியது. ஆனால், மூன்று வருடங்கள் கழித்தே இம்முடிவு இப்போது முறைப் படுத்தப்படவுள்ளது. ஜி.சீ.ஈ. உயர்தரத் தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி வெளியிடப்பட்ட விளம்பரத்தில் தவறுகள் மற்றும் குறைகள் காணப்படுகின்றன என்று எனது கவனத்துக்காகக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அவையாவன:-

(அ) ஜி.சீ.ஈ. உயர்தரத் தகுதியுடன் தெரிவாகும் ஆசிரியர்கள் மாவட்ட, பிரதேச அடிப்படையில் அவ்வப்பிரதேசத்தில், மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மத்தியிலிருந்தே நியமிக்கப்படவேண்டும். அப்போதுதான், நியமனம் பெறும் ஆசிரியர்கள தெரிவுசெய்யப்பட்ட மாவட்ட, பிரதேசங்களில் தொடர்ந்து பணிபுரிவதை உறுதிப்படுத்தமுடியும். இந்த நடைமுறைதான், முன்னர் நடத்தப்பட்ட ஆள்சேர்ப்பின் போது கடைப்பிடிக்கப்பட்டது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தின்படி விண்ணப்பதாரர்கள் எங்கிருந்தும் விண்ணப்பிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டின் வேறு பகுதிகளிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் நியமனம் கிடைத்ததும் வடக்கு - கிழக்கில் சிலகாலம் பணியாற்றிவிட்டு பின்னர், வடக்கு - கிழக்குக்கு வெளியே இடமாற்றம் கோருவர். இம்மாதிரியான ஆள்சேர்ப்பினால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான பற்றாக்குறைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. கடந்தகால நடைமுறை ஏன் பின்பற்றப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ளமுடியாதுள்ளது. தொழில் வாய்ப்புத்துறையில் வடக்கு - கிழக்கு இளைஞர்களுக்குக் கிடைக்கவிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பறிப்பதாக இப்புதிய விளம்பரம் அமைந்துள்ளது. இது அநீதியானதாகும். இதனை அனுமதிக்கக்கூடாது.

(ஆ) தற்போது வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தின்படி, ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய நான்கு துறைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த நான்கு துறைகளையும் சேர்த்து பத்துத் துறைகளுக்கு ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன என்று வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு அடையாளங்கண்டுள்ளது. சங்கீதம்/நடனம், சித்திரம், உடற்கல்வி, கடற்றொழில், விவசாய விஞ்ஞானம், மனையியல் ஆகியவையே ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் துறைகள் ஆகும் எஞ்சிய துறைகளும் ஆள் சேர்ப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். வடக்கு - கிழக்கில் காணப்படும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான கடும் பற்றாக்குறையைக் கருதிக்கொண்டு ஜி.சீ.ஈ. உயர்தரத் தகுதி பெற்றவர்களில் மேலும் ஒரு தொகுதியினருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் முடிவு எடுக்கப்படவேண்டும் ஏற்கனவே, விளம்பரப்படுத்தப்பட்ட துறைகளுக்கும், விளம்பரத்தில் குறிக்கப்படாத ஏனைய துறைகளுக்கும் சேர்த்து இவவாசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

(இ) ஆங்கில ஆசிரியர் நியமனத்துக்கான அடிப்படைத் தகுதியாக ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாக உட்பட மூன்று பாடங்களில் சித்தி அல்லது ஜி.ச.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில மொழி மூலத்தில் ஆங்கிலமொழியில் சித்தி பெற்றிருக்கவேண்டும் என்று விளம்பரத்தில் கோரப்பட்டது. இது யதார்த்தமற்றதாகும். மேற்கூறப்பட்ட தகுதிகளைக் கொண்டவர்களாக ஒரு சிலரே இருப்பர். அத்துடன், வடக்கு - கிழக்கில் காணப்படும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஏற்ப ஒத்துவராத தொகையாக இது அமையும்.

பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழு, ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் மூன்று சித்திகளும் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில மொழியில் அதிவிசேட சித்தியும் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தியும் பெற்றிருக்கவேண்டும் என்று முன்னர் தீர்மானித்திருந்தது. இது நடைமுறைச் சாத்தியமான நிபந்தனையாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களும், ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில மொழியில் அதிவிசேட சித்தி பெற்றவர்களும், நியாயமான தொகையினர் ஆங்கில ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றா. ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் 3 சித்திகளுடன் சாதாரண தரத்தில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றவர்களும் பணிபுரிகின்றார்கள். வடக்கு - கிழக்கில் பல்வேறு மாவட்டங்களில் பல ஆண்டுகளாக, ஒப்பந்த அடிப்படையில் இவர்கள் பணி புரிகின்றார்கள்.

ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்கக்கூடிய திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்று சில காலத்துக்கு முன் நாம் உங்களைக் கோரியிருந்தோம். அவர்கள் பல ஆண்டுகளாகச் சேவையாற்றி வருவதால், நியமனம் வழங்கும்போது வயதெல்லையை, அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியச் சேர்ந்த திகதியிலிருந்து கணிக்க வேண்டும் என்று நாம் யோசனை கூறியிருந்தோம். இவ்விடயம் குறித்து இன்னமும் இறுதிமுடிவு எடுக்கப்படாமல் இருககிறது; விரைவில் இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும். தற்போது வெளியிடப்பட்ட விளம்பரத்தின்படி, ஆங்கில ஆசிரியர் நியமனத்தில் எதிர்பார்க்கப்படும் முடிவுகள் கிடைக்காது என்று எனக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, வடக்கு - கிழக்கில் தமிழ்மொழி மூல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவது குறித்து மீண்டும் பரிசீலனை செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

(ஈ) வடக்கு - கிழக்கு மாகாண [illegible]மொழி ஆசிரியர் சேர்ப்புப் [illegible]சை கொழும்பில் மாத்திரம் நடத்தப்படும் என்று விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் சுமார் 50 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பில் மாத்திரம் பரீட்சை நிலையத்தை அமைப்பது, வடக்கு - கிழக்கைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்குப் பெருஞ்சிரமங்களை ஏற்படுத்தும் பரீட்சைத் திணைக்களம் கடைப்பிடித்து வந்துள்ள அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிராக இந்த நடவடிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

# 60 ஆயிரம் தென்னங்கன்றுகளை இந்த ஆண்டு நடுவதற்குத்திட்டம்

யாழ்ப்பாணம்,ஜன,2

யாழ்.குடாநாட்டிலும் வன்னிப் பிரதேசத்திலும் இந்த ஆண்டு 60 ஆயிரம் தென்னங்கன்றுகளை நடுவதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு தெங்குப்பயிர்ச் செய்கைச்சபையின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.சிவச்சந்திரன் தெரிவித்தார்.

குடாநாடு மற்றும் வன்னிப் பிரதேசங்களில் 800ஏக்கர் பரப்பளவில் இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். 60ஆயிரம் தென்னங்கன்றுகள் இதன் கீழ் நடப்படும்.

இதற்கான திட்டவரைபு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தெங்குப் பயிர்ச்செய்கை சபையின் வடபிராந்திய அலுவலகம் இத்திட்டவரைபைத தயாரித்து தலைமையகத்துக்கு அனுப்பியுள்ளது.

இதற்குரிய அனுமதி கிடைக்கும் போது யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படும். பின்னர் அவை பொது மக்கள் மூலமும் பொது அமைப்புகள் மூலமும் நடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.(ஒ-7)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்தோர் பொலீஸாரால் கைது!

மானிப்பாய் பகுதியில் அனுமதியின்றி டிராக்டரில் மணல் ஏற்றிச்சென்ற குழுவினரை மானிப்பாய் பொலீஸார் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்தனர்.

மணல் ஏற்றிவந்த டிராக்டர் மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. (ஒ-8-185)


## ஆசிரியர் தெரிவுப் போட்டிப்பரீட்சை

சனி, ஞாயிறு வகுப்புகள்

த.தவசேகர் B.Sc.

10-12 (S.L.T) டானியல் (வெலிங்டன் சந்தி)
12-2 (S.L.T) SCIENCE HALL (கன்னாதிட்டி)

(26655) (35)


## துயர் பகிர்தல்

எமது பிரதேச செயலகத்தில்
சமுர்த்தி முகாமையாளராகப் பணிபுரியும்
**திருமதி ஆனந்தகௌரி ஜெயக்குமார்**
அவர்களின் அன்புத்தந்தையார்
**அமரர் பரமு சுப்பையாபிள்ளை**


அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம்
வலி-தெற்கு - உடுவில்.

பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்.

(C/32380)(35-21-19)

## கண்ணீர் அஞ்சலி



30.12.2003 அன்று காலமான
எமது குடும்பத்தலைவர்
**கந்தசாமி குழந்தைவேலு**
(தம்பியண்ணா)
(நகரசபை மின்சாரசபை ஓய்வுபெற்ற மின்னிணைப்பாளரும்.
வாணி சவுண்ட் சேவிஸ் உரிமையாளரும்)

மலர்வு **15-01-1934**
உதிர்வு **30-12-2003**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03-01-2004) சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

கல்லூரி வீதி, ஒடக்கரை,
பருத்தித்துறை.
T.P. 021-226 3437.

- குடும்பத்தினர்.

(26653) (26-21-11-19)

# செய்திக் கொத்து

## நியமனம்

சண்டிலிப்பாய்,ஜன.2

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக இருந்து வந்த மருந்துக் கலவையாளருக்கான வெற்றிடம் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் நிரப்பப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற மருந்துக்கலவையாளர் ஒருவா இவ்வைத்தியசாலைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி.சிவபாதம் இந்த நியமனத்தை மேற்கொண்டுள்ளார்.

## காலாவதியான உணவுவகைகள் அழிப்பு

நவாலி,ஜன.2

நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் காலாவதியான உணவுப் பொருள்கள் சுகாதாரப்பகுதியினரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

சில தினங்களுக்கு முன்னர் மானிப்பாய் பகுதிச் சுகாதாரப்பரிசோதகர்கள் இப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களை திடீர் பரிசோதனை மேற்கொண்டபோது இவை கைப்பற்றப்பட்டு வீதிகளில் வைத்து தீயிட்டு அழிக்கப்பட்டன. (ஒ-100)

## குப்பிளான் பாடசாலைக்கு நிதி உதவி

வலிகாமம் தெற்கு,ஜன.2

குப்பிளான் விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தின் குழாய்நீர் விநியோகம், பாடசாலை மின் இணைப்பு போன்ற வேலைகளை மேற்கொள்வதற்காக இலண்டனில் வாழும் மேறபடி மகாவித்தியாலய பழைய மாணவர்கள் ஒரு லட்சம் ரூபாவை அனுப்பி வைத்துள்ளனர்.

மேற்படி வேலைகளைத் தொடங்குவதற்கு பாடசாலை அபிவிருத்திச் "சங்கத்தின் வங்கிக்கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிதியினை மீளப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதியை வலிகாமம் வலய பிரதிக்கல்விப் பணிபபாளர் சு.சுந்தரசிவம் வழங்கியுள்ளார். (ஒ-152)

## விநாயகர் அநுபூதி நூல் விநியோகம்

சுழிபுரம்,ஜன.2

சங்கானை மகாவித்தியாலய ஆசிரியர் ஆ.கனகரத்தினம் விநாயகர் அநுபூதி நூலை இலவசமாக விநியோகித்து வருகிறார். இந்த நூலை பெறவிரும்புவோர் ஆசிரியருடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-10-28)

## மதுபோதையில் வருவோரால் தொல்லை

குருநகர்,ஜன.2

சின்னக்கடை பொதுச்சந்தைப் பகுதியில் மதுபோதையில் வருவோரின தொல்லைகள் அதிகரித்துக் காணப் படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாகச் சந்தைக்கு வரும் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10-51)

## முதியோர் நலன்புரிச் சங்கம் அங்குரார்ப்பணம்

மானிப்பாய்,ஜன.2

மானிப்பாய் வடக்கில் முதியோர் நலன்புரிச்சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை10 மணியளவில் இந்த அங்குரார்ப்பணம இடம்பெற்றது. சங்கத்தின் தலைவராக மருதர் வைரமுத்து தெரிவுசெய்யப்பட்டார். (ம-10-90)

## 'யுனிசெவ்' நிதியுதவி

வலி.கிழக்கு,ஜன.2

கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்திற்கு 'யுனிசெவ்' நிறுவனம் 2 லட்சத்து 10 ஆயிரம்ரூபா நிதியை வழங்கியுள்ளது. இந்த நிதியில் இருந்து பிள்ளைநேயப் பாடசாலைத் திட்டத்தின் கீழ் குடிதண்ணீர்த்தாங்கி, மாதிரி வகுப்பறை என்பன புனரமைக் கப்படவுள்ளன. (ம-10-180)

## பாலம் புனரமைப்பு

பருத்தித்துறை,ஜன.2

பருத்தித்துறை முனை வீதியில் உள்ள பாலம் நீண்ட காலத்தின் பின்னர் பருத்தித்துறை நகரசபையினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

இதனையடுத்து முனைவீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (ஒ-10-118)

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் கல்லூரி பிரதி அதிபர் திருமதி வி. இலட்சுமணன்
அவர்களின் பாசமிகு சகோதரி
திருமதி
**சிவசோதி கந்தசாமி** அவர்கள்
காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை,
சுன்னாகம்.

அதிபர்.
ஆசிரியர் கழகம்.

(26660)(13-14-32)

## கண்ணீர் அஞ்சலி



**நாகமணி சிவானந்தம்**
**(ஆனந்தம்-மெக்கானிக்)**

அவர்களின் மறைவு மிகுந்த வேதனையைத் தருகிறது. இவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்திபெற ஸ்ரீ மீனாட்சி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதிப் பிரதம மார்ஷல்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(26581) (32-12-13)

அகில இலங்கை சமாதான நீதிவான்
-ஐ.கோ.சந்திரசேகரம்,
ச.கனகாம்பிகை, ச.நிலூஜா,
ச.சர்மதா, ச.சங்கரநேசன்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 21 - 05 - 1920



விண்ணில் 04 - 12 - 2003

**அமரர் நாகமுத்து பொன்னையா**
(முன்னாள் உரிமையாளர், விநாயகர் ஸ்ரோர்ஸ், சங்கானை)

வலி.மேற்கு தனியார் கல்வி நிலைய ஒன்றியத்தின் போசகரும். சங்கானை பொன்ஸ் கல்லூரியின் அதிபரும். கல்வித் திணைக்கள உத்தியோகத்தரும் ஆகிய சைவப்பிதா **பொன்.சாம்பசிவம் ஐயா** அவர்களின் அன்புத் தந்தை அமரர் **நாகமுத்து பொன்னையா** அவர்களின் மறைவு எங்கள் எல்லோருக்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் 31 ஆவது நாள் நினைவஞ்சலியில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் குடும்பத்தினரின் கவலையில் பங்குகொள்வதோடு ஆத்மாசாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம்சாந்தி! ஓம்சாந்தி!!*

**வலி.மேற்கு தனியார் கல்வி நிலைய ஒன்றியம்,சங்கானை.**

(26656)(34-21-11-19)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவக்கொழுந்து ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அச்சுவேலி, தோப்பைப் பிறப்பிடமாகவும், நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து ஆறுமுகம் 29-12-2003 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் (ஓய்வுபெற்ற பொலீஸ் அதிகாரி) அன்பு மனைவியும் திருமதி சுகிர்தராணி - சயனொளிபவன் (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை), திருமதி இந்திராணி - தயாகுணரட்ணசிங்கம் (ஆசிரிய ஆலோசகர், வவுனியா), தெய்வேந்திரன் (பொறியியலாளர், லண்டன்), சிவஞானம் (கணக்காளர், லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சயனொளிபவன் (முன்னாள் களஞ்சிய பொறுப்பதிகாரி நெல் சந்தைப்படுத்தும் சபை), தயாகுணரட்ணசிங்கம் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், செயலகம், வவுனியா), கலாவல்லி (லண்டன்), சுகமதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் முகுந்தன், தாட்சாயினி, சுகிற்றா, நிலானி, சரவணன், சாய்கிருஷ்ணா, செந்தூரன், சேந்தன், சுகந்தன், சுதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.01.2004 சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகத் தோப்பு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வசந்தம்,*
*இராச வீதி, தோப்பு,*
*அச்சுவேலி.*

தகவல்:
ஆ.சிவஞானம் *(மகன்)*

(26651) (26-21-11-19)

## திருமதி சின்னத்துரை புஷ்பமணி

(மண்டைதீவு - 6)

மண்டைதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை புஷ்பமணி நேற்று (01.01.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - விசாலாட்சி தம்பதிகளின் மகளும் சின்னத்துரையின் அன்பு மனைவியும் கனகமணியின் அன்புச் சகோதரியும் சோதிவேல், சோதிநாயகி, சகுந்தலா, கேதீஸ்வரநாதன், உதயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் மங்கையர்க்கரசி, ஜெகசோதி, சாந்தகுலசிங்கம், சந்தானலட்சுமி, ஜெயா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் மனோகரன் (லண்டன்), கோகுலவாசன் (ஆசிரியர், ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ்), கலையரசி, ஐங்கரி, சர்மிலன், பராஸ்கனி, யசீதரன், திவ்யா (ஜேர்மனி), ஐறின் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-01-2004) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞானவைரவர் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

(26650)(35-21-11-19)

# ஓய்வூதியர்கள் மீது அரசு காட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மை!



**அரச துறையில் அல்லது தனியார் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள் மத்தியில் அனுபவங்களுடன் கூடிய வல்லுநர்கள் இருக்கிறார்கள். ஆனால், எந்தத் துறையில் பணியாற்றியவர்கள் ஆனாலும் ஓய்வுபெற்றதும் அவர்களது வாழ்க்கை முற்றிலும் மாற்றமடைகிறது. பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர். இது குறித்து எவரும் அக்கறை எடுக்கவில்லை எனச் சாடுகிறார் கலாநிதி எஸ்.ஐ.கமகே ஞாயிறு "லங்காதீப" பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

அரச சேவையில் தொடர்ச்சியாக நீண்டகாலம் சேவையாற்றும் ஒருவர் சுதந்திரமாக வாழக்கிட்டும் சந்தர்ப்பமே சேவையிலிருந்து ஓய்வுபெறுதலாகும். அரச சேவை என்பது மிகப்பெரிய பொறுப்புவாய்ந்த பணியாகும். அதேபோன்று மிகப்பெரிய கடப்பாட்டையும் கொண்டதாகும். அரச சேவையில் முறைப்படி சேவையாற்ற வேண்டுமானால் அரச ஊழியரொருவர் அதற்காகப் பெரும் ஈடுபாட்டுடன் கடமையாற்றவேண்டும். சிலவேளைகளில் சட்டதிட்டங்களுக்கமைய அரச சேவையில் ஈடுபாட்டுடன் கடமையாற்ற முயலும் அரச ஊழியரொருவரின் தனிப்பட்ட சொந்த வாழ்க்கை சிரமங்கள் மிக்கதாக அமைவதுண்டு. பொதுமக்களுக்காகத் தனது தொழிலைத் திறம்பட ஆற்றவேண்டுமென்ற அந்த அரச ஊழியரின் அபிலாஷை காரணமாகவே அவர் அவ்வித சிரமங்களை எதிர்நோக்க வேண்டி நேரிடுகிறது.

### ஓய்வுபெற்றவர்களில் மூன்று பிரிவினர்

நம்நாட்டில் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்று வாழும் ஊழியர்களை மூன்று பிரிவுகளாகக் கருத முடியும். இவர்களில் முதலாவது பிரிவினர் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றதன் மூலம் மாதாந்தம் ஓய்வூதியம் பெறுபவர்கள். அரச கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்களில் சேவையாற்றி ஓய்வுபெற்ற தரப்பினரை இரண்டாவது பிரிவில் அடக்கமுடியும். மூன்றாவது பிரிவில் அடங்குவோர் தனியார்துறை நிறுவனங்களில் சேவையாற்றிய பின்னர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பிரிவினராவர்.

அரசசேவைகளைப் போலவே கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அமைப்புக்களிலும் தனியார் துறைகளிலும் பணியாற்றும் அதிகாரிகளும் ஊழியர்களும் அவர்களுக்குப் பிரித்தொதுக்கப்பட்ட கடமைகளையே மேற்கொள்கின்றனர்.

இவர்கள் தமக்கென ஒதுக்கப்படும் கடமைகளை நிறைவேற்ற நாளொன்றின் குறிப்பிட்ட மணித்தியாலங்களைச் செலவிட நேர்கிறது. மேற்குறித்த மூன்று பிரிவுகளில் எந்தவொரு பிரிவில் கடமையாற்றிய போதிலும் தத்தமது கடமைகளைச் சகலரும் விசுவாசத்துடன் மேற்கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அடிப்படைக் கோட்பாட்டில் எந்தவித வேறுபாடும் கிடையாது.

தத்தமக்கென ஒதுக்கப்படும் கடமைகளை முறைப்படி நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு அனைத்து நிறுவனங்களிலும் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் ஒரே வகையிலேயே அமைந்துள்ளது. ஊழியரொருவர் நாளொன்றின்போது எட்டு அல்லது ஒன்பது மணித்தியாலங்கள் கடமையாற்ற வேண்டுமெனச் சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### ஓய்வூதியக் கொடுப்பனவு

இந்தவகையில், சேவையிலிருந்து இளைப்பாறுவோருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் வேறுபடுகின்றன. அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் கடமையாற்றி ஓய்வுபெறும் சகலதர ஊழியர்களும் ஓய்வூதியம் பெற உரித்துடையவர்களாவர். இதனை அந்த உத்தியோகத்தரோ அல்லது ஊழியரோ தான் சேவையிலிருந்து இளைப்பாறிய நாள் தொடக்கம் மரணமடையும் நாள்வரையும் பெறுவதற்கு உரித்துடையவராவார். அரச ஊழியர்கள் சேவையிலிருக்கும்போது மாதாந்தம் சம்பளம் பெறுவது போன்று, இளைப்பாறிய ஊழியரொருவர் அவரது மரணம் சம்பவிக்கும் வரை மாதாந்தம் தனது சேவைக்கான ஓய்வூதியம் பெறும் தகுதியுடையவராவார். அவரது மரணத்தின் பின்னர் அவரது வாரிசுகளுக்கு அவரது அரச சேவைக்கான வெகுமதியாக மாதாந்த ஓய்வூதியம் அரசினால் வழங்கப்படும். இது விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நடைமுறைகளுக்கு அமைய, மரணமடைந்த அந்த அரச ஊழியரின் சட்டப்படியான மனைவி மற்றும் குறிப்பிட்ட வரைமுறைகளுக்குள் அமையும் பிளைகள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், அரச கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் மற்றும் தனியார்துறை நிறுவனங்களில் கடமையாற்றி ஓய்வு பெறும் ஊழியர்களுக்கு இவ்விதம் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை. அவ்வித ஊழியர்களுக்கு அவர்கள் ஓய்வுபெறும் சமயத்தில் அவர்களது சேவைக் காலம், தராதரம் என்பவற்றின் அடிப்படையிலமைந்த ஊழியர் சேமலாபக் கொடுப்பனவு ஒரே தடவையில் வழங்கப்படும்.

இந்த இருவகைக் கொடுப்பனவுத் திட்டங்கள் குறித்து நோக்கும்போது, அரச ஊழியர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்படுவதைவிட, மற்றைய துறை ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊழியர் சேமலாபக் கொடுப்பனவு நியாயமற்றதொன்றாகத் தோன்றுகின்றது. அரச ஊழியரொருவர் தான் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற நாள்முதல் தமது இறப்புவரை மாதாந்தம் ஓய்வூதியம்பெற முடியும். அதேவேளை, மற்றைய துறைகளைச் சேர்ந்த ஊழியர்கள் ஓய்வுபெற்ற பின்னர் தமது வாழ்க்கையில் ஒரேயொரு தடவையே தமக்குரிய ஊழியர் சேமலாபக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளமுடிகிறது.

ஆனால், அவ்விதம் ஊழியர் சேமலாபக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் ஊழியர் ஒருவருக்கு ஓய்வூதியம்பெறும் ஊழியர்போன்று நீண்டதொரு காலத்துக்குத் தனது இளைப்பாற்று ஊதியத்தின் பயனை அனுபவிக்கச் சந்தர்ப்பம் வாய்ப்பதில்லை. அவ்வாறானதொரு ஊழியர் தனக்குக் கிடைக்கும் ஊழியர் சேமலாபநிதிக் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்ட பின்னர் அத்தொகையை ஓரிரு மாதங்களிலோ அல்லது ஓரிரு வருடங்களிலோ செலவுசெய்த பின்னர் தனது தேவைக்கான பணம் கிடைக்காமையால் உளரீதியாகப் பாதிக்கப்படுகிறார். இதுபோன்றே, ஓய்வூதியம் பெறும் ஊழியரும் தான் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் முதுமை காரணமாகப் படிப்படியாக உளரீதியில் பாதிப்படைய நேர்கிறது.

### புத்திஜீவிகள் கூட்டம்

ஓய்வூதியர்கள் பற்பல தரத்தைச் சேர்ந்தவர்களாயுள்ளனர். இவர்களில் ஸ்ரீலங்கா நிர்வாக சேவை, ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை ஆகிய நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த உயர் பதவி வகித்து ஓய்வுபெற்றோரும், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், கணக்காளர்கள், பல்வேறு விஞ்ஞானத்துறை சார்ந்தோர், இலக்கிய, சங்கீத துறைசார் விற்பன்னர்கள், ஓவியர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், கணிதத்துறை, வரலாற்றுத்துறை, அரசியல்துறை, பூகோள விஞ்ஞானத் துறை மற்றும் வான் ஆராய்ச்சித்துறை ஆகிய துறைசார் வல்லுநர்களும் அடங்குவர். இது தவிர பலதரப்பட்ட துறைகளைச் சேர்ந்தோர் தத்தமது சேவைகளிலிருந்து ஓய்வுபெற்றுக்கொண்ட நிலையில் ஓய்வூதியம் பெற்றுவருவது மட்டுமன்றி, காலத்துக்குக் காலம் மேற்கூறிய துறைகளில் கடமையாற்றுவோர் தமக்குரிய வயது வந்ததும் சேவையிலிருந்து இளைப்பாறி வருகின்றனர். இவ்விதம் இந்தப் பல்துறைசார் ஊழியர்கள் ஓய்வூதியர்கள் என்றதொரு பிரிவில் ஒன்றிணையும் போது இவர்கள் யாவரும் புத்திஜீவிகள் கூட்டத்தில் அங்கத்தவர்கள் ஆகின்றனர். இவர்கள் சமூகத்துக்குப் பயன்தரும் சேவையாற்றும் தகுதிகொண்ட குழுவாக உருவாக முடியும். ஆனால், இவ்விதம் பல்துறை சார்நத பல ஆண்டுகள் சேவை அனுபவம்வாய்ந்த ஓய்வூதியர்களின் சேவையைச் சமூகத்துக்குப் பெற்றுக்கொள்ளத்தக்க நடைமுறையெதுவும் நாட்டில் கடைப்பிடிக்கப்படுவதாகத் தெரியவில்லை. இதற்கான அடிப்படைக் காரணம் இந்நாட்டில் இன்று நிலவும் சிக்கலான சமூக கட்டமைப்பிலுள்ள குறைபாடாகும்.

தற்போது அரசசேவையில் கடமையாற்றி ஓய்வுபெற்று ஓய்வூதியம் பெற்றுவரும் முன்னாள் அரச ஊழியர்களின் தொகை ஏறக்குறைய 3 லட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமாகும். இவர்களில் இருபது முதல் முப்பது வருடகால சேவையாற்றியோர் ஒரு தொகையினரும் மற்றொரு தொகையினர் முப்பது முதல் நாற்பது வருடகால சேவை அனுபவம் உடையவர்களாகவும் உள்ளனர். தனியார் துறைகளில் சேவையாற்றியோரில் சிலர் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான சேவை அனுபவம் கொண்டவர்களாகவும் இருந்து வருகின்றனர்.

இவ்விதம் சகல அரச கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்கள் தமது தனிப்பட்ட இளமைக்கால வாழ்க்கையைக் குத்தகைக்குவிட்டது போன்று, தமது வாழ்க்கையின் சிறப்பான பருவத்தைத் தத்தமது நிறுவனங்களின் உயர்வுக்கும், அபிவிருத்தி மற்றும் விரிவாக்கம் என்பவற்றுக்குமாகத் தியாகம்செய்து தொழிலாற்றியோராவர்.

### ஓய்வு பெற்றவரின் ஜீவநாடி

அரச ஊழியரொருவர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் அவரதும் அவரது குடும்பத்தவர்களதும் ஜீவநாடியாக விளங்குவது அவரது ஓய்வூதியமே. ஒரு சிலர் சேவையிலிருந்து ஓய்வுபெறும் வேளையில் அவர்களது பிள்ளைகள் கல்வி கற்கும் பருவத்தில் தமது படிப்பைத் தொடர்ந்து கொண்டிருப்பர். அவ்வாறானவர்கள் தமது பிள்ளைகளுக்கு

**வியெஸ்ரீ**

ஆற்றவேண்டிய பொறுப்புக்களினின்றும் விலகிச்செல்ல முடியாது. அந்த நிலையில், அந்த ஓய்வூதியர் தனது குடும்பத்தவர்களின் தேவைக்கெனப் பெருந்தொகைப் பணம் செலவிட வேண்டி நேர்கிறது. இது அரச ஊழியர்களை மட்டுமன்றி, கூட்டுத்தாபன, அதிகாரசபை மற்றும் தனியார் துறைகளில் சேவையாற்றி ஓய்வுபெறும் ஊழியர்களையும் பாதிக்கும் பொதுவானதொரு பிரச்சினையாகும்.

இவ்விதம் சகலதுறைகளிலும் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்கள் தமது மிகக்குறைவான ஓய்வூதியத்தைக் கொண்டே இவ்வகைச் செலவுகளைச் சமாளிக்க வேண்டியுள்ளது.

இவ்விதம் இருபது அல்லது முப்பது ஆண்டுகள் நாட்டுக்காகச் சேவை செய்து ஓய்வுபெறும் அரச ஊழியர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து இன்றுவரை இந்நாட்டில் அதிகாரம் வகித்த எந்தவொரு அரசும் நியாயமான விதத்தில் - அவர்களது நிதிப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் விதத்தில் - நடந்துகொள்ளவில்லை. நாட்டுக்காகச் சேவையாற்றி, ஓய்வுபெறும் ஓய்வூதியர்கள் உயிர் வாழும் வரையிலும் கௌரவமான முறையில் நடத்தப்படுவதோடு, நமது மதிப்புக்குப் பாத்திரமானவர்களாகவும் கருதப்பட வேண்டியமை அவசியமாகும்.

ஆனால், இந்நாட்டுமக்களின் உழைப்பை வர்த்தக சமூகத்தைச் சேர்ந்த தனவந்தர்கள் சிலர் அபகரிக்க வழிவகைகள் உண்டு. ஆனால், ஓய்வூதியர்களின் நலன்கள் பேணப்பட உரிய வழியேதுமில்லை. இந்நாட்டுக்காக விசுவாசமாகக் கடமையாற்றிய அரச ஊழியர்களின் நலன்களைப் பேணும் நடவடிக்கையை மேற்கொள்ள எந்தவொரு மதபீடமோ அல்லது சர்வதேச சமூகத்தின் நிதியைக்கொண்டு இயங்கும் எந்தவோர் அரசசார்பற்ற நிறுவனமோ இதுவரையில் முன்வரவில்லை.

### செல்லாக்காசுகள்

இன்று சில சந்தர்ப்பங்களில் கொள்ளைக்காரர்கள் மற்றும் கொலைகாரர்கள் போன்ற மன்னிக்கமுடியாத குற்றவாளிகளுக்குப் பட்டம், பரிசுகள் அளித்துக் கௌரவிக்கும் இந்த நாடு, விசுவாசமான விதத்தில் அரச சேவையில் கடமையாற்றிய அரச ஊழியர்களைச் செல்லாக்காசு போன்று மதிப்பிடுவதாகவே கூறமுடியும்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்குப் பத்து சதவிகித சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பள உயர்வின் குறைந்தமட்டத் தொகை ஆயிரத்து 250 ரூபாவாகவும், உயர்ந்த மட்டத் தொகை 12 ஆயிரத்து 250 ரூபாவுக்கு மேற்பட்ட சம்பள அதிகரிப்பைப் பெறும்வகையிலும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், உதாரணமாக மாதாந்தச் சம்பளமாக 22 ஆயிரம் ரூபாவைப் பெறும் உத்தியோகத்தர் ஒருவர் அதிகரித்த சம்பள உயர்வாக 2ஆயிரத்து 200 ரூபாவைப் பெற்றுக்கொள்வார். மாதாந்தம் 8ஆயிரம் ரூபாவை ஓய்வூதியமாகப்பெறும் இளைப்பாறிய உத்தியோகத்தர் ஒருவர் ஓய்வூதிய அதிகரிப்பாக மாதாமாதம் 800 ரூபாவை அதிகமாகப் பெற்றுக்கொள்வார். இது இவ்வாறானபோதிலும், ஆயிரத்து 250 ரூபாவோ 2 ஆயிரத்து 200 ரூபாவோ 800 ரூபாவோ அல்லது அதற்கும் குறைவான தொகையையோ அதிகரிப்பாகப்பெறும் ஊழியர் அல்லது ஓய்வூதியர் ஒருவருக்குக் கடையில் அரிசி வாங்கச்செல்லும் வேளையில் அவரவரது சம்பள உயர்வுக்கு ஏற்றவிதத்தில் விலை கூட்டியும் குறைத்தும் அரிசி விற்கப்படுவதில்லை. சம்பள அதிகரிப்பில் பற்பல ஏற்றத்தாழ்வு நிலவுகின்றபோதிலும், பொருள்களின் விலை உயர்வை சகலரும் ஒரே விதத்திலேயே எதிர்கொள்ள நேரிடுகிறது. அரசில் கடமையாற்றும் உத்தியோகத்தரோ அல்லது கூட்டுத்தாபனம், அதிகார சபை மற்றும் தனியார் நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களோ அல்லது ஓய்வூதியர்களோ கடையில் பணம் செலுத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யும் வேளையில் ஒரேவிதமான விலையேற்றத்துக்கே முகம் கொடுக்கவேண்டி ஏற்படுகிறது.

ஓய்வூதியத்தில் அதிகரிப்பு மேற்கொள்ளும் வேளையில் ஓய்வுபெற்ற அரச ஊழியரது நிலை குறித்து அரசு கவனமெடுத்ததாகத் தோன்றவில்லை. அவர் அரச சேவையாளர் என்ற வகையில் நாட்டுக்கு ஆற்றிய சேவையை அரசும் பொதுமக்களும் மறந்து விடுகின்றனர். அவரது பெருமைக்குரிய சேவை கௌரவிக்கப்படுவதில்லை. அந்த முன்னாள் அரச ஊழியரின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கான எவ்வித திட்டமும் அரசால் முன்னெடுக்கப்படுவதில்ல. அதுமட்டுமன்றி, அரச ஊழியர்களுக்கான சம்பளங்கள் அதிகரிக்கப்படும் சந்தர்பங்களில் கூட இந்த முன்னாள் அரச ஊழியர்களது சிரமங்கள் கணககில் கொள்ளப்படுவதில்லை.

ஓய்வூதிய அதிகரிப்பில் பாரபட்சம். மாதாந்த ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படும் பத்து விகித ஓய்வூதிய அதிகரிப்பை ஊழியர் சேமலாப நிதிக்கு உரித்துடைய கூட்டுத்தாபன மற்றும் தனியார் துறைகளில் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்கள் பெறுவதற்கான வாய்ப்பேதும் கிடையாது. அதுமட்டுமன்றி, வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்ட பத்து சதவீத சம்பள உயர்வை இத்தனியார் துறைகளில் சேவையாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் நடைமுறை குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அந்த வகையில், குறிப்பிட்ட பிரிவைச் சார்ந்த ஊழியர்கள் முற்று முழுதாக மறக்கப்பட்டிருப்பது மட்டுமன்றி, அரசதுறை ஓய்வூதியர்களும் ஏமாற்றப்பட்டுள்ளனர்.

அரச ஊழியர்களுக்கும், அரச துறைகளில் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கும் என அறிவிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பில் சமநிலை பேணப்படாதது நியாயமானதாகத் தோன்றவில்லை. இச்செயற்பாடு நியாயமானதா? நியாயமற்றதா? என்பதை அதற்குப் பொறுப்பு வாய்ந்தவர்களால் புரிந்துகொள்ள முடியாதிருப்பதற்கு, சாதாரண பொதுமக்களது வாழ்க்கைத்தரம் குறித்தும், கிராமப்புறங்களிலும், நகரப்புறங்களிலும் வாழும் அப்பாவி ஏழை மக்களின் வாழ்க்கைத்தரம் குறித்தும், கடுகளவாவது அவர்கள் அறிந்திராததே காரணமாகும்.

நாளுக்குநாள் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துச் செல்கின்றன. தனவந்த வர்க்கத்தினருக்குத் தேவையான ஆடம்பரப் பொருள்களின் விலைகள் குறைவடைகின்றன. இதன் காரணமாக பெரும் பயனடைபவர்கள் தனவந்த மற்றும் வர்த்தக சமூகத்தினரே. இந்தச் சம்பள உயர்வினாலோ அல்லது பெறுமதி சேர்வியாலோ, சிரமத்துடன் வாழ்க்கையை ஓட்டும் சாதாரண ஏழைப் பொதுமக்களுக்கு எவ்வித நன்மையும் கிட்டப்போவதில்லை.

இத்தகையநிலை காரணமாக, சாதாரண பொதுமக்களும், ஓய்வுபெற்ற ஊழியர்களும், சிரமமும் கவலையும் அடைவதால் உளரீதியில் தாக்கத்துக்கு உள்ளாக நேரிடுகிறது. இவ்விதம் மனித வாழ்க்கையுடன் அரசு விளையாடுவதால், தாம் சோறு உண்ண முடியாமல் வைக்கோலையும் பிண்ணாக்கையுமா உண்பது என அரசைக் கேட்கும் அளவுக்கு ஓய்வுபெற்றவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

### அநியாயத்துக்கு நிவாரணம்

ஆகவே, இந்த ஓய்வுபெற்று வாழும் சமூகத்தினருக்கு இழைக்கப்பட்டுள்ள அநியாயத்துக்கு நிவாரணம் வழங்க வேண்டிய பொறுப்பு அதிகாரத்திலுள்ள அரசைச் சார்ந்ததாகும்.

அதிகாரத்திலுள்ள அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றும் அரசுகள் இவர்களது பிரச்சினைக்கு நியாயமான நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தவறினால் இந்த ஓய்வூதியம் பெறும் சமூகத்தினர் தமக்கு நியாயம் பெற்றுக்கொள்வதற்கான சாத்வீகப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும். ஓய்வூதியரொருவர் சமூகத்தின் ஓர் அங்கமேயாயினும், சமூகத்தின் பெரும்பான்மையோர் கடும் சிரமத்துடன் தமது வாழ்க்கையை மேற்கொள்ளும் நிலையில், ஓய்வூதியம் பெற்று வாழும் சமூகத்தினர் இப்பொது மக்கள் சமூகத்துடன் ஒன்றிணைந்து இவ்வாழ்க்கைச் செலவு உயர்வை எதிர்த்துக் குரலெழுப்பக்கூடிய தன்மை மற்றும் பலம் என்பவற்றைக் கொண்டிருக்கவில்லை. அது சுதந்திரமான, தனித்துவமான குரலாக ஒலிக்க வேண்டியது அவசியமாகும்.

அக்குரல் சாதாரண கூக்குரலாக அமையாது, படித்தவர்களது குரலாக, புத்திஜீவிகளது குரலாக, பல்துறைசார் விற்பன்னர்களின் குரலாக, கலைத்துறைசார், பொறியியல் துறைசார், அனுபவங்கள்கொண்ட பலரது குரலாக மட்டுமன்றி நிர்வாகத்துறை சார்ந்த மற்றும் சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சிரமத்துடன் வாழ்க்கையை ஓட்டும் தொழிலாளவர்க்கத்தினரின் குரலாக ஓங்கி ஒலிக்கவேண்டும். இது இன்றைய காலத்தின் தேவையாகும்.

# தமிழ்மொழிமூல ஆசிரியர்களின்.....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ளது. ஆகவே, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் இப்பரீட்சை நடத்தப்படவேண்டும்.

(உ) நீண்டகால தாமதத்தின் பின்னர், வடக்கு - கிழக்கு தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் செய்யப்படவிருப்பதால், ஆசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான வயதெல்லையில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும். தற்போது ஆகக்கூடிய வயதெல்லை 30 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்பின்றி, வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் இளைஞர்கள் கஷ்டப்பட்டுள்ளார்கள் என்பதைக் கருத்திற்கொண்டு ஆகக்கூடிய வயதெல்லையை நிர்ணயித்து நியாயமான மாற்றம் செய்யப்படவேண்டும்.

(ஊ) ஆரம்பக் கல்வி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தமிழ்மொழி உட்பட மூன்று பாடங்களில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றிருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தமிழ்மொழியை ஒரு பாடமாக எடுக்காமல் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் விண்ணப்பிப்பதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளனர்.

தமிழ்மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறை வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழி மூல மாணவர்களின் கல்வியின் தரத்தில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது. ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பரிசீலனை செய்தால், வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க, 'இசற் ஸ்கோர்' வெட்டுப்புள்ளியில் குறைவானதாகக் காணப்படுகின்றன. யாழ். மாவட்டம் கூட முன்னைய வருடங்களில், கொழும்புடன் மட்டும்தான் போட்டியிட்டது. இன்றைய நிலைவரப்படி, நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மாவட்டங்கள் யாழ்ப்பாணத்துடன் போட்டியிடுகின்றன.

இந்த நிலைக்கு வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற யுத்தம்தான் முழுக் காரணம் என்று கூறமுடியாது. தற்போது நிலவும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான கடும் பற்றாக்குறையும், கணிசமான அளவு காரணமாகின்றது. வடக்கு - கிழக்கின் கல்வித்தரம் ஆரம்பநிலை தொடக்கம் இடைக்கல்வி வரை மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு அகில இலங்கை ரீதியில், திறமையின் அடிப்படையில், 40 சதவீத அனுமதி வழங்கப்படுகின்றது. வடக்கு - கிழக்கு தமிழ் மொழிமூல மாணவருக்கு எதிராக நீண்டகாலமாகக் காட்டப்பட்டுவந்த பாரபட்சமானபோக்கு, அவர்களால் கல்வியில் சமத்துவ நிலை, கல்வியில் சமவாய்ப்பு ஆகியவற்றைப் பெறமுடியாத நிலையை உருவாக்கியுள்ளது. குழந்தையின் அடிப்படை உரிமை கல்வியாகும்.

வடக்கு - கிழக்கில் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கு 4 ஆயிரத்து 221 வெற்றிடங்கள் உள்ளன. மாகாணப் பாடசாலைகளில் 4 ஆயிரத்து 26 வெற்றிடங்களும், தேசியப் பாடசாலைகளில் 195 வெற்றிடங்களும் காணப்படுகின்றன. நாட்டின் ஏனைய பகுதிகளில் சிங்கள மொழிமூல பாடசாலைகளில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான சிங்கள மொழிமூல ஆசிரியர்கள் மேலதிகமாகப் பணிபுரிகின்றனர். சில மதிப்பீடுகளின்படி இந்த எண்ணிக்கை சுமார் 10 ஆயிரம் என்று கூறப்படுகிறது. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சிங்கள மொழிமூல ஆசிரியர்களுக்கு 199 வெற்றிடங்கள் உள்ளன. இவற்றில் 158 வெற்றிடங்கள் மாகாணப் பாடசாலைகளிலும் 41 வெற்றிடங்கள் தேசியப் பாடசாலைகளிலும் உள்ளன.

வடக்கு - கிழக்கில் தேவையான தமிழ்மொழிமூல ஆசிரியர்களை நியமிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தமிழ்மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறை பற்றிய பிரச்சினை குறித்து கவனம் செலுத்த சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக முழுமையாகப் பரிசீலனை செய்ய ஜனவரி நடுப்பகுதியில் மாநாடு ஒன்றைக் கூட்ட நடவடிக்கை எடுங்கள். தமிழ் மொழிமூலமான ஆசிரியர் நியமனத்தில் காட்டப்பட்டுவந்த நீண்ட தாமதம் இனியும் தொடரக்கூடாது.

- இவ்வாறு சம்பந்தன் எம்.பி. பிரதமருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.*

ஒரு மனிதனுக்கு இன்றைய காலகட்டத்தில்

* ஒரு தொலைக்காட்சியை அல்லது றேடியோவை இயக்க..........
* தொலைபேசியை அழுத்தி ஒரு தொடர்பை ஏற்படுத்த........
* கல்குலேட்டரில் கணக்கொன்றைப் பார்க்க..........
* சைக்கிள் ஒன்றை ஓட்டத் தெரிந்திருப்பது

எவ்வளவு அவசியமோ அதேபோல் இனிவரும் காலங்களில்

ஒரு மோ. சைக்கிளையோ, காரையோ ஓட்டத் தெரிந்திருப்பது மிகவும் அவசியமாகிறது

எனவே கிடைத்திருக்கும் சமாதான சூழ்நிலையில்

**குறைந்த செலவில் ! குறுகிய காலத்தில்!! சிறந்த முறையில்!!!**

பயிற்சி பெற்று சாரதி லைசென்ஸ் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

**01.01.2004 முதல் 31.01.2004 வரை**

பதிவு செய்வோருக்கு 20% விசேட சலுகைக் கட்டணம்

தொடர்பு: S.V. குணபாலன் 239, பிரதான்வீதி, யாழ்ப்பாணம், தொ.பேசி : 2225844

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### நன்றி நவிலலும்

அன்னையின் அரவணைப்பில் 13 ~ 07 ~ 1942

ஆண்டவன் அழைப்பில் 03 ~ 12 ~ 2003



## அமரர் மாரிமுத்து தங்கவேலு

03.12.2003 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் திடீர் மறைவுச் செய்திகேட்டு உடன்வந்து எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், மயானம்வரை வந்து உதவியோர்க்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (02-01-2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் எம் அழைப்புத் தவறியவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.
(26645)(35-24-14-)

மனைவி - தவமணிதேவி,
பிள்ளைகள், மருமக்கள்.

## உடுப்பிட்டி பல நோ.கூ.சங்கம் (வ/து)

### வெற்றுப் பொருள்களுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

எமது சங்கத்தில் உள்ள கீழ்வரும் தொகையான வெற்றுச் சாக்கு, வெற்றுப்பைகளை விற்பனை செய்வதற்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 50 கிலோ கொள்ளளவு சாக்கு | - | 1985 | தனி |
| நவதானிய சாக்கு | - | 285 | தனி |
| கழிவு சாக்கு | - | 125 | தனி |
| மா பை | - | 9250 | தனி |
| ஏனைய பை | - | 21383 | தனி |
| கழிவு பை | - | 420 | தனி |

சங்கத்தில் வழங்கப்படும் படிவத்தில் மேற்குறிப்பிட்டவற்றுக்கான விலைகளைக் குறித்து 10.01.2004 மு.பகல் 11.00 மணிக்கும் 12.00 மணிக்கும் இடையில் சங்கத்தில் சமர்ப்பிக்கவும். பிற்பகல் 12.15 மணிக்கு கேள்விப்பத்திரம் பிரித்து பரிசீலிக்கப்படும். கேள்விப் பத்திரத்தில் பொருள்கள் தரம் 1,2,3 கழிவு என்றவாறு விலைகள் அமைவதோடு முழுப்பொருள்களுக்கும் கேள்வி கோரப்படவேண்டும்.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி பல நோ.கூ.சங்கம்,
உடுப்பிட்டி.

(C/32355)(35-21-14-19)

**A/L-2006**

கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்: 03-01-2004
சனி காலை 8 மணி (ப.நே.).

**நியூட்டன்**

ஆரியகுளம் சந்தி அருகில்,
யாழ். நகர்.
(34-24-14) (26648)

## குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம்

### திருவெம்பாவை

இடம்:- ஏழாலை தெற்கு வசந்தபுரம்
அருள்மிகு ஸ்ரீவசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

காலம்:- 04.01.2004 ஞாயிறு
அதிகாலை 5.30 மணி முதல்

வருடந்தோறும் எமது நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்படும் இந்நிகழ்வில் இடம்பெறும் வழிபாடு, கூட்டுப்பிரார்த்தனை, சமயச் சொற்பொழிவு, குருமார் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகளில் பங்குகொள்ளுமாறு அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு:- நிதியுதவி செய்யவிரும்புவோர் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும்.

(26601) (26-14-19-21) - நிர்வாகம்.

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்







உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2271167 இருந்து
2289003 வரை
சீட்டிழுப்பு இல. 1466
திகதி 31.12.2003

## வெற்றி எண்கள்

**02 07 19 26 55** போனஸ் எண் **38**

## ஜக்பொட் பரிசு

**ரூபா.3,058,000/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 3,058,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 118 | 10,000/- | 1,180,000/- |
| 3 | 5,580 | 500/- | 2,780,000/- |
| 2 | 93,727 | 20/- | 1,874,540/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 115,067 | 10/- | 1,150,670/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,185,210/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

**ரூபா.3,946,100/-**

தொடர் இல. 3240321க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2004 டிசம்பர் 03ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2272138-3-71
2285069-9-26
2284359-4-69
2278521-2-57
2280626-6-65

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

## உரும்பிராய் அக்குபங்சர் வைத்தியர் திரு.க.ரகுராம் அவர்களைப்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த 7வருடங்களாக "எக்சிமா" நோயினால் மிகவும் கஷ்டப்பட்ட நான் எத்தனையோ பல வைத்திய நிபுணர்களிடம் சிகிச்சை பெற்றும் மாறாத, தீராத நோயை மாற்ற முடியாமல் அவதியுற்றேன்.

இந்நிலையில் -

*உரும்பிராய் அக்குபங்சர் வைத்தியர்* திரு. க. ரகுராம் அவர்களிடம் சிகிச்சைபெற்று எதுவித மாத்திரைகளுமின்றி குறுகிய காலத்தில் நோய்மாறி முற்றாகக் குணமடைந்துள்ளேன்.

அவரது சேவையால் நலமடைந்த நான், வைத்தியரின் சேவை மேன்மேலும் நன்கு தொடர இறை ஆசி வேண்டிப் பிரார்த்திப்பதோடு, அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

சு.சகுந்தலா

கோண்டாவில் மேற்கு. (26610) (26-14-19-21)

## விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு நிதி

வடமராட்சி, ஜன.2

தென்புலோலி, குரும்பகட்டியைச் சேர்ந்த 18 விவசாயக் குடும்பங்களுக்கு தொழில் ஊக்குவிப்பு நிதியாக தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. யு.என்.எச்.சி.ஆர் இந்த நிதியுதவியை வழங்கவுள்ளது. நாளை சனிக்கிழமை குரும்பகட்டியில் நடைபெறும் விசேட நிகழ்வில் இந்த நிதி வழங்கப்படுமெனக் கூறப்பட்டது. (எ-173)

சிவமயம்

**தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்த ஆதீன முதல்வர்களின் அருளுரை**

காலம் : இன்று (02-01-2004) வெள்ளி மாலை 4 மணி

இடம்: சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி, திருநெல்வேலி.

தொடக்கவுரை- மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன அவர்கள் *(இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்)*

அனைவரும் வருகைதந்து சுவாமிகளின் அருளைப் பெற்றுக் கொள்வீர்களாகுக.

*திருநெல்வேலி.* (26676)(16-12-32) *அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபையினர்.*

## கண்ணீர் அஞ்சலி

மீசாலை விநாயகர் பேக்கரி உரிமையாளர்
திரு.செ. பரமலிங்கம் அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி பொன்னம்மா செல்லத்துரை**
அவர்களின் மறைவிற்காக அஞ்சலி பகிர்கின்றோம்.

பைந்தமிழ் பேக்கரி, சாவகச்சேரி. (26672)(36-12-16-32) ருவிங்கிள் ஸ்ரார் பேக்கரி, பாண்டியன்தாழ்வு.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 11 - 3 - 1958



மறைவு: 31 - 11 - 2002

**அமரர் இராசு குணசிங்கம் (அச்சு)**

(முன்னாள் யாழ்.மாநகரசபை ஊழியர்)

(திதி-02-01-2004)

அன்பும் பண்புமுடைய அச்சுவே!
ஆசையுடன் வளர்த்த எம்மைவிட்டு
இறைவனடி சேர்ந்ததென்ன மகனே அச்சு!
ஆண்டொன்று கழிந்தாலும் ஆறவில்லை எம்மனசு
வேண்டுகின்றோம் நல்லூர் முருகனை உன் ஆத்மா சாந்தியடைய.

இன்று (2-01-2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*24,பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (26666)(32-12-16)
சி.இராசு J.P, (தந்தை), சகோதர, சகோதரிகள், மைத்துன, மைத்துனிகள்.

## ஆத்ம சாந்தி நிகழ்வு

16.12.2003 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி
**அமரர் மாரிமுத்து புண்ணியமூர்த்தி**
அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை
இன்று (02.01.2004) வெள்ளிக்கிழமை
காலை 10.00 மணியளவில்
அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்,
அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*லக்ஷமிஸ்தான், உடுவில் வீதி, மருதனார்மடம்.* (26667)(16-12-32)


**C.C.A.** K.K.S.வீதி, சுன்னாகம்.
A/L 2006
கலை வர்த்தக பிரிவுகள்
ஆரம்பம்: 03.01.2004
காலை 7.30 மணி
தரம் 6 - 11 வரையான வகுப்புகள் நடைபெறுகின்றன.
(26663)(12)

எதிர்பாருங்கள் ?
நாளை
குறைந்த கட்டணத்தில்
(26516)(32-12-16)

**அறிவொளி** - நல்லூர்.
PHYSICS
Mr.ம.ஸ்பெல்மன்
A/L 2005
புலங்கள்
ஆரம்பம்: 03.01.2004
3.30 p.m. Sat.
(வெப்பவீயல் நடைபெறுகின்றது)
A/L 2004
வினாவிடை
ஆரம்பம்: 03.01.2004 5.30p.m. Sat.
A/L 2006 நேரடிச் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
ஆரம்பம்: 03.01.2004 (Sat)
A/L 2004
வினாவிடை வகுப்பு
ஆரம்பம்: 07.01.2004 2.30 p.m. (Wed.)
(மீள் பரீட்சார்த்திகள் மட்டும்)
(26657)(12)

**நாகம்ஸ்** சுன்னாகம்
தருண், த்ரிஷா, விவேக், மணிவண்ணன் நடித்த
எனக்கு 20 (ரீலீஸ்) உனக்கு 18 (பு.நே.)
தினசரி காட்சி : 11.00, 3.00.
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 7 மணி
(C-323372)(12)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
இன்று மட்டும்
மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி (ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி சனி ஞாயிறு
KEOMA
இரவு 8.45 இற்கு (பு.நே.)
(C-32175) (12)

**ராஜா** யாழ்ப்பாணம்

இளைய தளபதி விஜய், ஜோதிகா நடித்த
திருமலை (ரீலீஸ்)
காட்சிகள் 10.30,2.30,6.30,9.30 (பு.நே.)
(சி-32369) (32)

**லஷ்சுமி சினிமா** இணுவில்
ரஜனி, மீனா, செந்தில், மற்றும் பலர் நடித்த
வீரா (ரீலீஸ்)
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30. (பு.நே.)
(26623)(32)

**லிபேட்டி** அச்சுவேலி

அஜித், மீராஜஸ்மின் நடித்த
ஆஞ்சநேயா (ரீலீஸ்)
தினசரி காட்சி நேரம்: 3.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 3.00,7.00 (பு.நே.)
(C-32371) (32)


## வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் கௌரவிப்பு விழா

முன்னாள் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் *திருமிகு T.V கிருஸ்ணசாமி* அவர்களின் சேவை நலன் பாராட்டும்

முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பும்

*தலைவர்* : திரு. இ.அரிகரன் (வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர்)
*இடம்* : யா/இராமநாதன் கல்லூரி மண்டபம்
*காலம்* : 03-01-2004 சனி பி.ப. 2.30 மணி
*பிரதமவிருந்தினர்*: திருமிகு K.இராசையா (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம்)

வலி தெற்கு முன்பள்ளி ஆசிரியர்கள், சனசமூக நிலைய நிர்வாகிகள், முன்பள்ளி மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகியோரை அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-32390)(32-12-16-32) *வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசம்.*

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சின்னத்துரை

சுதுமலை வடக்கு, ஈருபடி வைரவர் கோவிலடியைச் சேர்ந்த தம்பையா சின்னத்துரை அவர்கள் நேற்று(01.01.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சுதுமலை வடக்கு.* (26669)(36-12-16-32) சி.பற்குணராசா (மகன்-குணம்)

## சின்னத்தம்பி சுந்தரலிங்கம் (ஓசு)

இராமநாதன் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகவும் புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுந்தரலிங்கம் (ஓசு) அவர்கள் நேற்று (01.01.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2004) வெள்ளிக்கிழமை 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகாலிங்கம் (மகான்-சகோதரன்).
*இராமநாதன் வீதி, கலட்டி.*

## சின்னட்டி சண்முகம்

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி சண்முகம் நேற்று (01.01.2004) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (02.01.2004) வெள்ளிக்கிழமை 2.00 மணியளவில் உரும்பிராய் எருளன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.
நா.செல்வராசா (ராசு) *உரும்பிராய் வடக்கு.* (26679)(16-12-32)

## திருமதி சின்னம்மா சங்கரப்பிள்ளை

மாதகலைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா சங்கரப்பிள்ளை அவர்கள் நேற்று (01.01.2004) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிற்றம்பலம் வள்ளிப்பிள்ளையின் அன்பு மகளும், அமரா செல்லதுரை, அமரர் இரத்தினம், அமரர் சிவபாக்கியம், அன்னப்பிள்ளை, இலட்சுமி ஆகியோரின் சகோதரியும் இராசதுரை, இராஜேஸ்வரி, திருநாவுக்கரசு (சின்னராசா), அமரர் திருவாதுரை, சோதிலிங்கம் (மணியம்), ஈஸ்வரி, லோகேஸ்வரி, தனேஸ்வரி, ஞானேஸ்வரி, அமரர் நற்குணநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி, அமரர் செல்வரட்ணம், செல்வமணி, இராசமலர், ஈஸ்வரன், இராமநாதன், மகாலிங்கம், அமரர் தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (02.01.2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.திருநாவுக்கரசு,(மகன்-கடியன்)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
*சிலம்புப்புளியடி, சங்கானை.* (26661)(16-12-32)

## சிவானந்தம் வாதவூரன்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் தற்பொழுது பிரான்ஸில் வசித்தவருமாகிய சிவானந்தம் வாதவூரன் அவர்கள் நேற்று (01.01.2004) வியாழக்கிழமை இணுவிலில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் சாரதாம்பாளின் அன்புக் கணவரும் வசந்தி (ஜேர்மனி), மீரா (பிரான்ஸ்), சிவானந்தராசா (பிரான்ஸ்), சிவபாலன் (சின்னத்தம்பி- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குஞ்சிதபாதம் (ஜேர்மனி), காமாட்சி சுந்தரம் (பிரான்ஸ்), சோதீஸ்வரி (பிரான்ஸ்), சியாமளா (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும் காயத்திரி (ஜேர்மனி), கார்த்திகா (ஜேர்மனி), கோபிநாத் (ஜேர்மனி), புருசோத்மன் (பிரான்ஸ்), கீர்த்தனா (பிரான்ஸ்), பார்த்தீபன் (பிரான்ஸ்), பிரதீபன் (பிரான்ஸ்), பிரசாந் (பிரான்ஸ்), தினேசன் (பிரான்ஸ்), பிரியங்கா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவானந்தராசா (சிவா), சிவபாலன் (சின்னத்தம்பி). (மகன்மார்)
*4ஆம் கட்டையடி, இணுவில்.* (26670)(36-12-16-32)

## திருமதி இராசையா சரஸ்வதி

பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா சரஸ்வதி 01.01.2004 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற C.T.தம்பித்துரை சொலமன் நாகரெட்டினத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகம் இராசையாவின் (யாழ். மாநகரசபை மராமத்து பொறியியலாளர்) அன்பு மனைவியும், பத்மலோஜினி (சுவிஸ்), நந்தலோஜினியின் (கொழும்பு) பாசமிகு தாயாரும் சொலமன்ஸ் (சுவிஸ்), சந்திரபாலா (கொழும்பு), சாம்சொலமன்ஸ் (லண்டன்), காலஞ்சென்றவர்களான வாசிங்கன், சொலமன்ஸ், சாவித்திரி, சாமியல், பாலாசொலமன்ஸ மற்றும் ராஜரட்ணம் (லண்டன்), அரியமலர்தங்கம் (அமெரிக்கா), ஜெயமலா குட்டான் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.01.2004) கொழும்பு கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.இ.சௌந்தரம்.
*இல.12/2,புனித அன்னம்மாள் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு,யாழ்ப்பாணம்.* (26668)

## முத்தையா செல்வராசா

**(சாலைப் பரிசோதகர்,இ.போ.ச.கோண்டாவில்)**

நீதிமன்ற வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த முத்தையா செல்வராசா அவர்கள் நேற்று (01.01.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-இராசம்மா தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் யோகாம்பிகையின் அன்புக் கணவரும் தயாபரன் (பொறிவலர், இ.போ.ச. கோண்டாவில்), தயாமதி, தயாரூபன், சயிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுஜீபாவின் அன்பு மாமனாரும் ஜாஸ்மினியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகேந்திரன் (மாமன் - பெயின்ரர்).
*நீதிமன்ற வீதி, மல்லாகம்.* (26669)(36-12-16-32)

# இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்த.....

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
அரசமைப்புப்படி - ஒற்றையாட்சி முறையின் கீழ் - சரியான அதிகாரப் பார்வை எல்லா சமூகங்களும் அனுபவிப்பதற்கு நிறையத் தடைகள் உள்ளன என்பதே பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. சுயாட்சியும், பங்காட்சியும் என்ற அடிப்படை யிலேதான் சமஷ்டி ஆட்சிமுறை அமையவேண்டும் அதை இயலச் செய்வதற்காகத்தான் நாங்கள் இந்த விஷயத்தை பிரஸ்தாபித்திருக்கிறோம்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் வைத்து 2002 டிசெம்பர் மாதம் தீர்மானிக்கப்பட்டவாறு ஒரு சமஷ்டி அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வை, இயலச்செய்வதாக இருந்தால் அதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். ஓர் இடைக்கால அரசமைப்பு ஒன்று அமைவது இந்த இலக்குகளை அடைவதற்கு ஒரு சாதகமான சூழலை உருவாக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

அதேபோன்று அரசினதும், புலிகளினதும் யோசனைகளிலே இருக்கின்ற வெவ்வேறு துருவப்படுத்தல் போக்கைக் களையும் ஒரு முயற்சியாகவும் இடைக்கால அரசமைப்பு உதவலாம்.

*கேள்வி:* நீங்கள் முன்வைக்கும் இந்த இடைக்கால அரசமைப்பு யோசனையில் எந்த அம்சத்தை நீங்கள் அதிகமாக வலியுறுத்திப் பேசுகிறீர்கள்?

*பதில்:* சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு என்பது நாட்டிலே பல இடங்களிலே வெவ்வேறு அடிப்படைகளிலேயே அறிமுகப்படுத்தப்படலாம் என்பது எங்களுடைய எதிர்பார்ப்பு. அதாவது, வடக்குக் கிழக்குப் பிராந்தியத்தில் அமையப்போகின்ற இடைக்கால நிர்வாக அலகுகளுக்கு கூடுதல் அதிகாரங்களும் அதற்கு குறைவான அதிகாரங்கள் வடக்குக் கிழக்குக்கு வெளியே அமையப்போகின்ற இதர அரசியல் அலகுகளுக்கும் கொடுக்கப்படலாம். தேவைகளுக்கேற்ப அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுகின்ற ஒரு முறையாக நாம் இதனை ஏற்படுத்திக் கொள்ளலாம். முழு நாட்டிலும் - தேவை ஏற்பட்டால் எல்லை மீள் நிர்ணயம் செய்யப்பட்டு - அதிகார அலகுகளைக் குறைத்தோ கூட்டியோ இந்த ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம் என நாம் நம்புகிறோம்.

*கேள்வி:* முஸ்லிம்களுக்கான தனி நிர்வாக அலகுகள் என்றால் அவை எந்த மாதிரியானவை? ஏதாவது முன் மாதிரிகளை நீங்கள் உதாரணப்படுத்துகின்றீர்களா?

*பதில்:* எங்களுடைய எதிர்பார்ப்பின்படி இந்தியாவில் நடைமுறையில் இருக்கின்ற 'யூனியன் பிரதேசங்கள்' என்கின்ற நிர்வாக நடைமுறை அதாவது, பாண்டிச்சேரி மாநிலத்திலே இருக்கின்ற நிர்வாக நடைமுறை நேரடி நிலத்தொடர்புகள் இல்லாத அடிப்படையில் அமையப்பெற்றுள்ள பல பிரதேச அலகுகளை ஒன்றாக இணைத்து நிர்வாகத்தைச் சீராகச் செய்யக் கூடிய ஏற்பாடுகள் அங்கு உள்ளன. எனவே, அவற்றை அடியொட்டியதாக நாங்கள் இலங்கையிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற - குறிப்பாக வடக்குக் கிழக்கு பிரதேசத்திலே - தமிழரின் மேலாதிக்கத்தின் கீழ் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதை எதிர்க்கின்ற முஸ்லிம்களுக்கு மத்தியில் அவர்களுடைய அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அடிப்படையில் நாங்கள் இந்த யோசனைகளை முன்வைத்திருக்கிறோம்.

*கேள்வி:* வடக்குக் கிழக்கு தவிர, வேறு இடங்களிலும் முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழ்கிறார்கள். அவர்களுக்கும் தனி நிர்வாக அலகுகளைக் கோருகிறீர்களா?

*பதில்:* வடக்குக் கிழக்குக்கு வெளியிலே தேவையேற்படும் பட்சத்தில் - முஸ்லிம்களை என்று மட்டுமல்ல - மலையகப் பிரதேசத்தில் வாழ்கின்ற இந்திய வம்சாவளித் தமிழர்களையும் நாம் கவனத்தில் கொள்ளலாம். அவர்கள் அடர்த்தியாக வாழ்கின்ற பிரதேசங்களில் அவர்களின் தேவைக்கேற்ப அவர்களுக்கும் அந்த அதிகாரப் பங்கீட்டைச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதை எங்களுடைய யோசனைகள் வலியுறுத்தும்.

*கேள்வி:* இடைக்கால அரசமைப்புத் தேவை என்ற உங்களது கோரிக்கைகளுக்கு இலங்கையின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும், புலிகளும் எப்படி எதிர்வினையாற்றுவார்கள் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

*பதில்:* அதைப் பற்றி நாங்கள் இப்போது ஷோஸ்யம் கூறமுடியாது. இதைக் கண்மூடித்தனமாக எதிர்ப்பதில் அர்த்தமில்லை. பேச்சுக்களின் மூலமாக ஒரு சுமுகத்தீர்வை அடைய வேண்டும் என்பதுதான் சரியான வழியாக இருக்கும் - என்றார் அமைச்சர் ஹக்கீம்.

அவர் மேலும் கூறியதாவது:-
புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வடக்கு - கிழக்கு மாகாணம் அங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் தாயகம் என்று கூறியதோடு கடந்த காலங்களில் இடம்பெற்ற தவறுகளுக்கும் வருத்தம் தெரிவித்திருந்தார்.

ஆனால், புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக வரைவில் தனிப்பட்ட முறையில் தமிழ் மக்களுக்கான திட்டம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் முஸ்லிம்கள் முற்றாக ஓரங்கட்டப்பட்டுவிட்டனர்.

எனவே, எமது மக்களின் பாதுகாப்புத் தொடர்பாகவும் அரசியல் பங்கு தொடர்பாகவும் அடிப்படை உரிமைகள் தொடர்பாகவும் குரல் எழுப்ப வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக ஜனாதிபதி 2000ஆம் ஆண்டில் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தார். இந்த அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும்கூட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பான ஆலோசனைகளை முன்வைத்துள்ளன.

இவை அனைத்திற்கும் இடையில் பாரிய முரண்பாடுகளும், இடைவெளிகளும் காணப்படுகின்றன. அவற்றுள் அரசமைப்புக்கு மாறுபட்ட விடயங்களும் அடங்கியுள்ளன.

இவை மூன்றையும் நாம் மிகவும் நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்துள்ளோம். எமது மக்களின் அடிப்படை உரிமைகளை உள்ளடக்கியே எங்களுடைய ஆலோசனைகளைத் தயாரித்துள்ளோம். இத்திட்டத்தைத் தயாரிப்பதற்குப் பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சட்ட மேதைகளின் ஆலோசனைகளையும் பெற்றுள்ளோம்.

எங்களுடைய ஆலோசனைகள் அடங்கிய தீர்வுத்திட்டத்தை இன்று வெளியிடுவதாக இருந்தோம். ஆனால், அதில் காணப்படும் இரு முக்கிய விடயங்கள் தொடர்பாக மீள்பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கட்சியின் அரசியல் யாப்புக்குழு கூறியதால் இதனைச் சற்றுப் பின்போட்டுள்ளோம்.

இது தனிப்பட்ட முறையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தை மட்டும் தனிமைப்படுததி கவனிக்கும் ஒன்றாக அமையாமல் பிறமாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களின் உரிமைகள மற்றும் பாதுகாப்புத் தொடர்பான ஆலோசனைகளையும் உள்ளடக்கிய திட்டமாகவே இருக்கும் - என்றார் ஹக்கீம். (எ-3-4)

## மறியற்போராட்டம்

கொடிகாமம் கொயிலாமனைப் பகுதி மக்களின் மறியல் போராட்டத்தினால் தென்மராட்சிப் பிரதேச செயலகம் நேற்றுக் காலை 2 மணிநேரம் ஸ்தம்பித்தது.

படையினரால் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ள, கண்டிவீதியிலிருந்து கொயிலாமனை ஊடாக மந்துவிலுக்குச் செல்லும் வீதியினை திறந்து விடக்கோரியே இப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பிரதேசசெயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## விபத்தில் பலி!

அல்வாய், மாலிசந்தியில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணி யளவில வேகமாகவந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்த பொதயாளரூபன் (வயது 28) என்பவர் உயிரிழந்தார். மோட்டார்சைக்களில் பின்னாலிருந்து வந்த என். ஆனந்தரூபன் (வயது 34) என்பவர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளார். (எ-4-173-70-15)

## மல்லாவியில்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)
பாதையைவிட்டு விலகி வேறு வகையில் பறந்த இந்த ஹெலிகொப்டர்களினால் பொதுமக்கள் மத்தியில் அச்சமும பதற்றமும் ஏற்பட்டன. இது அத்துமீறிய பறப்பு நடவடிக்கை - இப்படி புலிகள் மேலும் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.


இன்று ஆரம்பம்
சுண்டுக்குளியில் இயங்கிய
A/L 2006 S.வரதராஜன் B.A (Hons) A/L 2006
ஆசிரியரின்
பொருளியல் பிரத்தியேக வகுப்பு
தற்போது இரு இடங்களில்
D.C.M
பழம் றோட், கந்தர்மடம் 4.00 மணி (ப.நே)
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் 3.00 மணி (ப.நே)

D.C.M பழம் றோட், கந்தர்மடம்
A/L 2006
கலை, வர்த்தகம்
பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - முகுந்தன்
வணிகக் கல்வி - உமாகாந்த்
அளவையியல் - மோகன்
இ.நாகரீகம் - ஸ்ரீஸ்
தமிழ் - காந்தன்
புவியியல் - குமரன்
ஆரம்பம் 2-1-04 வெள்ளி 4.00 மணி (ப.நே)

பொருளியற் கல்லூரி
பெருமாள் கோவில் அருகில் நாவலர் றோட். யாழ்ப்பாணம்.
இணுவில் மத்திய கல்லூரி அருகில் கே.கே.எஸ். றோட். இணுவில்.
A/L 2006
கலை, வர்த்தகம்
நாளை ஆரம்பம்: 03-01-2004, சனி.
யாழ். நகரின் பிரபலம் மிக்க ஆசிரியர் குழுவினால்

| A/L 2006 | யாழ். நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரீகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| நாடக-அரங்கியல் | சுகந்தன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| அரசியல் | றஜீவன் | றஜீவன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

(சி-32374)(30-16-12)
யாழ். நகரில் : கலை, வர்த்தகப் பிரிவு - 9.00 a.m.
இணுவிலில் : கலைப் பிரிவு 9.00 a.m./ வர்த்தகப் பிரிவு 3.00 p.m.

NEW SCIENCE COLLEGE
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.
இணைந்த கணிதம்
A/L-2005
A/L-2006 சன, ஞாயிறு - 11.00 - 1.00
★ஒரு தளவிசைகள★
★கணித தொகுத்தறிவுமுறை★
சனி, ஞாயிறு 7.00 - 9.00
ஆரம்பம்: 03.01.2004
(26652)(36)
ஆசிரியர்: P.செந்தில்நாதன் B.Sc.

அறிவொளி - நல்லூர்
A/L 2006
இணைந்த கணிதம்
B.ரவீந்திரன்B.Sc
ஆரம்பம்: 03.01.2004 4 p.m. (ப.நே.)
(26557)(36)

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம
கணித, உயிரியல் பிரிவு
A/L 2006
ஆரம்பம: 3.1.2004 (சனி) மு.ப. 8 மணி
CHE. :- V.C. அன்பழகன்
PHY. :- திரு. ஜெயசீலன். திரு. பிரபா
BIO. :- திரு. தற்பரன்.
COM. MAT.:- திரு. பிரதீபன். M.ராஜன்.
(26638)(36)

CHEMISTRY CENTRE
Temple Road, Nallur
A/L 2005
"INORGANIC CHEMISTRY"
இன்று ஆரம்பம்
3 - 4 p.m.
(சி-32345)(36)
BY:- அன்பழகன்

கணக்கீடு
A/L2005
சொத்து விற்பனை
ஆரம்பம் நாளை 2 p.m.
A/L 2004
வருமானச்செலவுக்கணக்கு
ஆரம்பம் நாளை 4 p.m.
ஆசிரியர் S.தவா
B.Com(Hons)(Acc.Spl)
NEW SCIENCE COLLEGE JAFFNA.

SUBRA(14)
2006 A/L
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள்
ஆரம்பம் :
03.01.2004
சனி,காலை - 8.30.
(சி-32377)(36)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி மயில்வாகனம்

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி மயில்வாகனம் நேற்று (01.01.2004) வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், நவமணி, தவபாலன், வேல்மன்னன், சிவமணி, தவமணி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2004) பி.ப 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவபுரவீதி கைதடி வடக்கு.*
தகவல்:
(26678)(36-13-16) க.நடராஜகுமார்(மருமகன்)

## திருமதி மங்கையற்கரசி செல்லத்துரை

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மங்கையற்கரசி செல்லத்துரை அவர்கள் நேற்று (01.01.2004) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற M.K. செல்லத்துரையின் அன்பு மனைவியும், சாரதாதேவி, காந்திமதி, சரோயினிதேவி, சுத்தானந்தன், சந்திரமணிதேவி, நித்தியானந்தன், காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் பாலமீரா ஆகியோரின் அன்புத் தாயாரும் தவராசா, ஜெயராஜா, சுந்தரலிங்கம் நந்தகலா, ஜெசுதாசன், தேவராணி, கெங்கராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நித்திகடை, கொக்குவில்.* (26677)(36-12-16) S.நித்தியானந்தன்.

## சரவணமுத்து அம்பலவாணர்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து அம்பலவாணர் அவர்கள் 31.12.2003 புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் திருமதி தங்கமுத்துவின் கணவரும் இராசலட்சுமி இராசரத்தினம், தங்கமலர் இராஜேஸ்வரி (ஆசிரியை, நீ/விஜயரத்தினம் இம.க.), இராமச்சந்திரன் (ஜேர்மனி), இராசரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுப்பிரமணியம் நடராசா (கடை சுதாஸ் ஸ்ரோஸ்), சிறிகுமரன் (விமானப்படை உத்தியோகத்தர்), கலைச்செல்வன் (கனடா), கோகிலாம்பாள், யசோதை (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் துஷ்யந்தன் (பிரான்ஸ்), துஷிக்குமார், பானுகா, பபிதா, புரந்திகன், சிறிதகன், கோபிராம், கயானன், பார்க்கவின், சிறிராம், ஆரணி, ஆரபி ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (1.1.2004) வியாழக்கிழமை சண்டிலிப்பாயில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி பத்துப்பனையடி மயானதத்தில் தகனஞ்செய்யப்பட்டது இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆலங்குழாய் றோட், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.*
(26675)(36-12-16)
தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.